
தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வேலூரில் 106 டிகிரி வெயில்



**சென்னை,**

தமிழகத்தில் திங்கள்கிழமை அதிகபட்சமாக வேலூரில் 106 டிகிரி வெயில் பதிவானது. இதே போல சென்னை, திருச்சி, கரூர் பரமத்தி, மதுரை, சேலம் ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது.

கடந்த 4-ஆம் தேதி கத்திரி வெயில் மழையுடன் தொடங்கியது. குமரி அருகே காற்றழுத்த தாழ்வு நிலை உருவானதால் கத்திரி தொடங்கி ஒரு வாரம் வரை தமிழகத்தில் வெயிலின் தாக்கம் குறைவாக இருந்தது. இந்த நிலையில் காற்றழுத்த தாழ்வு நிலை பலவீனமடைந்ததால் மீண்டும் தமிழகத்தில் வெயில் அதிகரித்துள்ளது. சென்னையில் திங்கள்கிழமை 102.7 டிகிரி வெயில் பதிவானது. நண்பகலில் நகரின் பல இடங்களில் அனல் காற்று வீசியது. வரும் நாள்களில் வெயில் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திங்கள்கிழமை பதிவான வெயில் (டிகிரி பாரன்ஹீட்டில்):

வேலூர் 106.7

திருச்சி 104.5

கரூர் பரமத்தி 103.1

சென்னை 102.7

சேலம் 102.2

மதுரை 102

கடலூர் 100

தருமபுரி 100

பாளையங்கோட்டை 99.5

நாகை 98.9


கோவை 95.7

தூத்துக்குடி 93

கன்னியாகுமரி 90.8

கொடைக்கானல் 69.8

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



**மேட்டூர்,**

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், திங்கள்கிழமை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 3,574 கன அடியாக அதிகரித்தது. கடந்த சில நாள்களாக தமிழக - கர்நாடக எல்லையில் காவிரி ஆற்றின்

நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நல்ல மழை பெய்து வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது.

திங்கள்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 3,574 கன அடியாக அதிகரித்தது. அணையின் நீர்மட்டம் 34.31 அடியாக இருந்தது. குடிநீருக்காக திங்கள்கிழமை காலை முதல் அணையிலிருந்து மீண்டும் வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 9.31 டி.எம்.சி.யாக உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை 32.89 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் நீர்வரத்து அதிகரிப்பால் திங்கள்கிழமை 34.31 அடியாக உயர்ந்தது. கடந்த மூன்று நாள்களில் அணையின் நீர்மட்டம் 1.42 அடி உயர்ந்தது.

## வேளாண் படிப்புகளில் சேர மாணவர்களிடம் ஏக கிராக்கி

**கோவை,**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை வேளாண் பட்டப் படிப்புகளில் சேர ஆன்லைனில் விண்ணப்பிக்கும் பணி தொடங்கியது. தமிழகம் முழுவதும் இருந்து திங்கள்கிழமை ஒரே நாளில் 7,075 பேர் ஆன்லைனில் பதிவு செய்துள்ளதாக மாணவர் சேர்க்கை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2014-15 கல்வியாண்டில் 13 பட்டப் படிப்புகளில் சேருவதற்கான ஆன்லைனில் விண்ணப்பிக்கும் பணி, திங்கள்கிழமை தொடங்கியது. கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நூற்றுக்கணக்கான மாணவ, மாணவியர் தங்களது பெற்றோருடன் விண்ணப்பம் பெற வந்திருந்தனர்.

இந்த ஆண்டில் பட்டப் படிப்பில் சேர ஆன்லைனில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்பதால், பல்கலைக்கழக வளாகத்தில் 10-க்கும் மேற்பட்ட உதவியாளர்கள் மூலம் மாணவர்கள் ஆன்லைனில் விண்ணப்பித்தனர். ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கிய முதல் நாளில் 7,075 பேர் விண்ணப்பித்துள்ளனர். இதில் 2,678 பேர் ஆன்லைனில் பதிவு செய்து, விண்ணப்பங்களை பூர்த்தி செய்து சமர்ப்பித்துள்ளனர். வேளாண் பல்கலைக்கழகத்தின் இளநிலை படிப்புகளில் சேர ஜூன் 7-ஆம் தேதி வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். இந்த ஆண்டில்

வேளாண் பல்கலைக்கழகத்தில் சேர மாணவ, மாணவிகளிடையே கடும் போட்டி நிலவும் எனத் தெரிகிறது.

1,820 இடங்களுக்கு கடும் போட்டி: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உறுப்புக் கல்லூரிகளில் 1,040 பேரும், இணைப்புக் கல்லூரிகளில் 780 பேரும் என மொத்தம் 1,820 பேர் சேர்க்கப்படுகின்றனர். இதில் இணைப்புக் கல்லூரிகளில் 50 சதவீத இடங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தாலும், மீதமுள்ள 50 சதவீத இடங்கள் அந்தந்தக் கல்லூரிகளாலும் நிரப்படுகிறது.

2013-ஆம் ஆண்டில் மாணவர் சேர்க்கை கலந்தாய்வில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சேர ஓ.சி. பிரிவினருக்கு 196.00 கட் ஆஃப் மதிப்பெண்கள் இருந்தது. அதேபோல பி.சி. பிரிவினருக்கு 189.00-ம், பி.சி.எம். பிரிவினருக்கு 193.25-ம், எம்.பி.சி. பிரிவினருக்கு 187.25-ம், எஸ்.சி. பிரிவினருக்கு 178.50-ம், எஸ்.சி.ஏ. பிரிவினருக்கு 188.25-ம், எஸ்.டி. பிரிவினருக்கு 188.00 கட் ஆஃப் மதிப்பெண்கள் இருந்தது.

வேளாண் படிப்புகளில் சேர கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 40,000 பேர் விண்ணப்பித்திருந்தனர். இந்த ஆண்டு யாரும் எதிர்பாராத வகையில் ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கிய முதல் நாளே 7,075 பேர் விண்ணப்பித்துள்ளனர். இந்த எண்ணிக்கை மிகவும் அதிகம். இன்னும் ஆன்லைனில் விண்ணப்பிக்க ஜூன் 7-ஆம் தேதி வரை காலக்கெடு உள்ளதால், இந்த ஆண்டில் வேளாண் படிப்புகளுக்கு விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும் எனத் தெரிகிறது.

அதேபோல 1,820 இடங்களே உள்ளதால், மாணவர்களிடையே கடும் போட்டியும், கட் ஆஃப் மதிப்பெண்ணும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த ஆண்டில் முதல்கட்ட கலந்தாய்வு ஜூன் 30-ஆம் தேதி தொடங்கி, ஜூலை 9-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. அதேபோல இரண்டாம்கட்ட கலந்தாய்வு ஜூலை 14-ஆம் தேதி முதல் ஜூலை 17-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. வகுப்புகள் ஜூலை 25-ஆம் தேதி தொடங்கும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

**அரசாணையை மீறி மாணவர் சேர்க்கை நடத்தும் கல்லூரிகள்**பிளஸ் 2 தேர்வு முடிவு வெளியான சில மணி நேரங்களிலேயே எந்தக் கல்லூரியில் எந்தப் படிப்பை

தெரிவு செய்வது என்பதில் மாணவருக்கு மட்டுமல்ல, பெற்றோரும் நிதானமின்றி அவசரம் காண்பிக்கின்றனர். ஐ.டி. மோகம் குறைந்த நிலையில், பொறியியல் படிப்புகளில் சேரும் ஆர்வம் மாணவர்களிடையே குறைந்து வருகிறது.

இதனால் பி.காம். பி.பி.எம். படிப்புகள் மற்றும் அடிப்படை கணித படிப்புகளில் பி.எஸ்சி. கணிதம், வேதியியல், இயற்பியல் படிப்புகளில் சேர மாணவர்கள் ஆர்வம் காண்பித்து வருகின்றனர்.

தேர்வு முடிவுகள் வெளியானதும், பெற்றோர் தங்களது குழந்தைகளை எந்த படிப்பில் சேர்ப்பது என்று அவசரம் காட்டுகின்றனர். இந்த அவசர நிலையை பயன்படுத்திக் கொள்ளும் தனியார் கல்லூரி நிர்வாகங்கள், பணத்தை வாங்கி மாணவர் சேர்க்கையை நடத்தி முடித்து விடுகின்றனர். மாணவர்களும் ஒருவித பதபதைப்புடனே படிப்புகளில் சேரும் சூழ்நிலை உள்ளது.

பிளஸ் 2 தேர்வு முடிந்து 10 நாள்களுக்குப் பிறகே கல்லூரிகள் மாணவர் சேர்க்கை நடத்திட வேண்டும் என்று தமிழக அரசின் அரசாணை உள்ளது. ஆனால், இந்த அரசாணையை தனியார் கல்லூரிகள், சுயநிதி கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் கண்டுகொள்வதில்லை. அதேபோல, பிளஸ் 2 தேர்வு வெளியானவுடனேயே மாணவர் சேர்க்கை நடத்துகின்றனர்.

கடந்த இரு ஆண்டுகளாக வேளாண் படிப்புகளில் சேர மாணவ, மாணவியர் ஆர்வம் காண்பிக்கின்றனர். இந்தப் படிப்பை முடித்தவுடன் ஏதாவது ஒரு வங்கியிலோ அல்லது உர நிறுவனங்கள், விதை நிறுவனங்கள், ஆட்டோ மொபைல் துறைகளில் வேலை கிடைக்கிறது. வேளாண் ஆராய்ச்சிகளும் விரிவாக நடந்து வருவதால், வேளாண் படிப்புகளுக்கு நல்ல மவுசு உள்ளது என கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கால்நடை சார்ந்த படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் விநியோகம்

**திருப்பரங்குன்றம்,**

மதுரை திருப்பரங்குன்றத்திலுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், கால்நடை மருத்துவம், உணவு பதனிடுதல் (பி.டெக்) தொழில்நுட்பம், கோழியியல் (பி.டெக்) தொழில்நுட்பம்


ஆகிய படிப்புகளுக்காண விண்ணப்பங்கள் திங்கள்கிழமை முதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தில் விண்ணப்பம் வழங்கப்பட்ட முதல் நாளிலேயே ஏராளமான மாணவ, மாணவியர் மிகுந்த ஆர்வத்துடன் நீண்ட வரிசையில் நின்று விண்ணப்பங்களை பெற்றுச் சென்றனர்.

கால்நடைப் படிப்புக்கு பிற்படுத்தப்பட்டோர் உயிரியல், இயற்பியல், வேதியியல் ஆகிய பாடங்களில் 65 சதவீத மதிப்பெண்ணும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 60 சதவீத மதிப்பெண்ணும் பெற்றிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்டோர், அருந்ததியர், பழங்குடியினர் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதும்.

விவசாயம், கோழியியல், கறவை மாடுகள் குறித்த படிப்புக்கு பிளஸ் 2 தொழிற்கல்வி படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு 0452-2483903 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும். மேற்கண்ட தகவலை கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத் தலைவரும், பேராசிரியருமான பண்ணை முருகானந்தம் தெரிவித்தார்.

## கால்நடை மருத்துவப் படிப்பு: கட்-ஆஃப் மதிப்பெண் 0.5 அதிகரிக்கும்: துணைவேந்தர் தகவல்



**சென்னை,**

கால்நடை மருத்துவப் படிப்புகளுக்கான கட்-ஆஃப் மதிப்பெண் கடந்த ஆண்டை விட 0.5 அளவுக்கு உயரும் என தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல்

பல்கலைக்கழக பதிவாளரும் துணைவேந்தருமான (பொறுப்பு) டி.ஜே. ஹரிகிருஷ்ணன் கூறினார்.

கால்நடை மருத்துவப் படிப்பு கலந்தாய்வுக்கான விண்ணப்ப விநியோகத்தை சென்னை வேப்பேரி கால்நடை மருத்துவக் கல்லூரி மையத்தில் திங்கள்கிழமை (மே 12) தொடங்கி வைத்த அவர் இந்த தகவலை தெரிவித்தார்.

இது குறித்து மேலும் அவர் கூறியதாவது:

ஐந்தரை ஆண்டு கால்நடை மருத்துவ அறிவியல் படிப்பை (பி.வி.எஸ்சி.) பொருத்தவரை சென்னை (120 இடங்கள்), நாமக்கல் (80), திருநெல்வேலி (40), ஒரத்தநாடு (40) ஆகிய பகுதிகளில் உள்ள 4 கல்லூரிகளில் மொத்தம் 280 இடங்கள் உள்ளன.

இதில் மாற்றுத் திறனாளிகளுக்கு 8 இடங்களும், விளையாட்டுப் பிரிவின் கீழ் 5 (மகளிர் -3, ஆண்கள் -2) இடங்களும், முன்னாள் ராணுவத்தினரின் வாரிசுகளுக்கு 2 இடங்களும், சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு 1 இடமும், பிளஸ்-2 தொழில் பிரிவு படித்த மாணவர்களுக்கு 14 இடங்களும் ஒதுக்கப்படும்.

மத்திய அரசு ஒதுக்கீட்டுக்கு (இந்திய கால்நடை மருத்துவக் கவுன்சில்) 48 இடங்கள் ஒப்படைக்கபபடும்.

இது தவிர சென்னை அருகே திருவள்ளூர் மாவட்டம் கொடுவள்ளியில் உள்ள கல்லூரியில் நான்கரை ஆண்டு பி.டெக். (எஃப்.டி.-உணவுத் தொழில்நுட்பம்) படிப்பு (20 இடங்கள்)

உள்ளது. ஒசூரில் உள்ள கல்லூரியில் பி.டெக். (பிபிடி-கோழியின உற்பத்தி தொழில்நுட்பம்) படிப்பு (20 இடங்கள்) உள்ளது.

இந்தப் படிப்புகளில் 2014-15 கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்காக இந்த கலந்தாய்வு நடத்தப்படுகிறது. செப்டம்பர் முதல் வாரம் அல்லது இரண்டாவது வாரத்தில் கலந்தாய்வு நடத்தப்படும்.

ஜூலையில் தரவரிசைப் பட்டியல்: கால்நடை மருத்துவப் படிப்புக்கான விண்ணப்பங்கள் தமிழகம் முழுவதும் உள்ள 14 மையங்களில் மே 30-ஆம் தேதி வரை விநியோகிக்கப்படும்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை ஜூன் 2-ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தை தபால் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

www.tanuvas.ac.in என்ற பல்கலைக்கழக இணையதளத்தைப் பயன்படுத்தி ஆன்-லைன் மூலமும் விண்ணப்பிக்கலாம். தரவரிசைப் பட்டியல் ஜூலை மாதம் வெளியிடப்படும்.

கட்-ஆஃப் மதிப்பெண் உயரும்: பிளஸ்-2 தேர்வில் இயற்பியல், வேதியியல் ஆகிய பாடங்களில் 200-க்கு 200 மதிப்பெண்ணை இந்த ஆண்டு ஏராளமான மாணவர்கள் பெற்றுள்ளனர். மேலும் வேதியியல், உயிரியல் பாடங்களில் 200-க்கு 199-லிருந்து 197 மதிப்பெண் வரை ஏராளமான மாணவர்கள் பெற்றுள்ளனர்.

இதனால், கால்நடை மருத்துவ அறிவியல் படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்களுக்கான கட்-ஆஃப் மதிப்பெண் கடந்த ஆண்டை விட 0.5 மதிப்பெண் உயர வாய்ப்பு உள்ளது.

கடந்த கல்வி ஆண்டில் (2013-14) பொதுப் பிரிவில் (ஓ.சி.) அதிகபட்சம் 199 கட்-ஆஃப் மதிப்பெண் முதல் 197 கட்-ஆஃப் வரை பெற்றவர்களுக்கு பி.வி.எஸ்சி. படிப்பில் இடம் கிடைத்தது. பிற்படுத்தப்பட்டோர் (பி.சி.) பிரிவில் 199 முதல் 196.75 கட்-ஆஃப் வரை பெற்றவர்களுக்கு இடம் கிடைத்தது. எம்.பி.சி. பிரிவில் 198.50 முதல் 194.50 கட்-ஆஃப் பெற்றவர்கள் இடங்களைப் பெற்றனர். எஸ்.சி. மற்றும் எஸ்.டி. பிரிவில் 197 முதல் 190 கட்-ஆஃப் மதிப்பெண் வரை பெற்றவர்களுக்கு இடங்கள் கிடைத்தன. நடப்புக் கல்வி ஆண்டில் (2014-15) இந்த கட்-ஆஃப் மதிப்பெண் அனைத்துப் பிரிவினருக்கும் 0.5 அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு உறுதி: கால்நடை மருத்துவ அறிவியல் படிப்புகளை மேற்கொள்பவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு கிடைப்பது உறுதி.

அரசுத் துறைகளைப் பொருத்தவரை மூன்று ஆண்டுக்கு ஒரு முறை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) தேர்வு நடத்தி கால்நடை மருத்துவர் இடங்களை நிரப்புகிறது. இது தவிர பால்பண்ணைகள், கோழியின உற்பத்தித் துறை உள்ளிட்ட தனியார் துறைகளிலும் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன என்றார் அவர்.

## <u>மதுரையில் திடீர் கன மழை</u>

**மதுரை,**

மதுரையில் திங்கள்கிழமை மாலை திடீரென கனமழை பெய்தது. இதனால் சாலைகளில் நீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மதுரையில், கடந்த சில நாள்களாக மழை பெய்துவருவதால் ஓரளவு வெப்பம் தணிந்து காணப்பட்டது. இருந்தபோதும் வெளியில் நடமாட முடியாத படி அக்னி வெயில் சுட்டெரித்தது. திங்கள்கிழமை காலை தொடங்கி மதியம் வரை வெயில் வாட்டி வதைத்தது. மதியத்துக்கு மேல் குளிர்ந்த சூழல் நிலவியது.

குளிர்காற்று வீசியதைத் தொடர்ந்து கனமழை பெய்தது. இதனால் நகர் பகுதிகளில் ஆங்காங்கே சாலைகளில் தண்ணீர் தேங்கியது.

வாகனங்கள் மழைநீரில் தத்தளித்தவாறு சென்றன. இதன் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சித்திரை திருவிழாவில் அழகர் ஆற்றில் இறங்குவதை காணவந்துள்ள பக்தர்கள் இந்த மழையைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். இந்த திடீர் மழையால் வெப்பம் மேலும் தணியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## <u>தேனியில் தக்காளி விலை உயர்வு</u>

**தேனி,**

தேனி உழவர் சந்தையில் தக்காளி வரத்துக் குறைவால் விலை உயர்ந்து கிலோ ரூ.20-க்கு விற்பனையானது.

மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. செடிகளில் பழம் அழுகியும் பூச்சி விழுந்தும் காணப்படுவதால் பல இடங்களில் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், உழவர் சந்தை மற்றும் தினசரி சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்துள்ளது. கடந்த வாரம் வரை கிலோ ரூ.5 விற்பனையான தக்காளி, தற்போது கிலோ ரூ.20 வரை விற்பனையாகிறது. பீன்ஸ், டர்னிப், சவ்சவ், பட்டர் பீன்ஸ், சோயா பீன்ஸ், நூக்கல், கேரட் ஆகிய மலைக் காய்கறிகள் வரத்து இல்லாததால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## காரைக்குடி, சாக்கோட்டை பகுதிகளில் கன மழை

**காரைக்குடி,**

காரைக்குடி மற்றும் சாக்கோட்டை பகுதிகளில் திங்கள்கிழமை பிற்பகலில் பலத்த காற்று மற்றும் இடி, மின்னலுடன் கூடிய கன மழை பெய்தது. மேலும் நகர் மற்றும் சுற்றுப்புறங்களில் 10-க்கும் மேற்பட்ட இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன.

காரைக்குடி பகுதியில் திங்கள்கிழமை காலையிலிருந்து மதியம் வரை வெயில் அடித்தது. பின்னர் கருமேகம் திரண்டு பிற்பகல் 3 மணியளவில் லேசாக மழை பெய்யத் தொடங்கி கனமழையாக மாறியது. சாக்கோட்டை பகுதியில் வீரசேகரபுரம், புதுவயல், கண்டனூர் பகுதியில் பலத்த இடி, மின்னலுடன் மழை பெய்தது. மேலும் பலத்த காற்றும் வீசியது. சுமார் அரை மணி நேரம் பலத்த மழை பெய்ததால் மழை நீர் வெள்ளமாக பெருக்கெடுத்து சாலைகளில் ஓடியது.

கோட்டையூர் பகுதியில் போதிய மழை இல்லை. ஆனால் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் பகுதியில் பலத்த மழை பெய்ததால் சாலையில் மழை நீர் பெருக் கெடுத்து ஓடியது. அழகப்பா பல்கலைக்கழகம் அறிவியல் வளாகம் எதிரே மரம் சாலை யில் சாய்ந்ததால் திருச்சி, அறந்தாங்கி பகுதியிலிருந்து காரைக்குடி நகருக்கு வந்த பேருந்து மற்றும் இதர வாகனங்கள் சிரமத்திற்கு உள்ளாகின.

மேலும் காரைக்குடி பெரியார் சிலை பகுதியில் உள்ள உணவகம் முன்பாக நின்ற மரம்

வேரோடு சாய்ந்து கடையின் உள்ளே விழுந்ததால் கட்டடம் சேதமடைந்தது. மேலும் நீதிமன்றம் முன்பாகவும், தேவர் சிலை பகுதி மற்றும் நூறடிச்சாலை உள்ளிட்ட 10-க் கும் மேற்பட்ட இடங்களில் மரங்கள் சாய்ந்தன. இதனால் நகரில் மின்சாரம் துண்டிக்கப் பட்டது.

## மணலூர் பகுதியில் பலத்த மழை

**திருப்புவனம்,**

சிவகங்கை மாவட்டம் மணலூர் பகுதியில் திங்கள்கிழமை மாலை பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்தது. இதனால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

வங்க கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலையால் கடந்த சில நாள்களாக தென்மாவட்டங்களில் பலத்த மழை பெய்தது. ஆனால் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை, திங்கள்கிழமை நண்பகல் வரை வழக்கத்துக்கு மாறாக வெயில் அதிகமாக காணப்பட்டது. இந்நிலையால் கோடை காலங்களில் பயிரிடப்பட்ட வேளாண்மைக்கு போதிய தண்ணீர் இல்லாமல் பலனின்றி போய்விடுமோ என விவசாயிகள் மீண்டும் கவலைக்குள்ளாகினர். இந்நிலையில் திங்கள்கிழமை மாலை பலத்த காற்றுடன் மணலூர், கழுகேர்கடை, தட்டான்குளம், சக்குடி பாலம், அங்காடிமங்கலம் விலக்கு பகுதிகளிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கனமழை பெய்தது.

இதனால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

திருப்புவனம், பூவந்தி, திருப்பாச்சேத்தி ஆகிய பகுதிகளிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் லேசான சாரல் மழை மட்டுமே பெய்தது விவசாயிகளுக்கு வருத்தத்தை தந்தது.

## <u>கரும்பு சாகுபடி பயிற்சி முகாம்</u>

**ராஜபாளையம்,**

ராஜபாளையம் அருகேயுள்ள கணபதி சுந்தரநாச்சியார்புரத்தில் விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடி பயிற்சி முகாம் நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம், நபார்டு வங்கி சார்பில் இந்த பயிற்சி முகாம் நடந்தது. நவீன முறையில் கரும்பு சாகுபடி செய்து வரும் விவசாயி ராமலிங்கத்தின் கரும்புத் தோட்டத்தை பிற கரும்பு விவசாயிகள் பார்வையிட்டனர். விவசாயிகளின் சந்தேகங்களுக்கு மதுரை வேளாண்மைக்கல்லூரி உழவியல் துறை பேராசிரியர் குருசாமி விளக்கமளித்தார்.

திருநெல்வேலி நபார்டு வங்கி துணை பொது மேலாளர் ராமலிங்கம், நவீன முறையில் கரும்பு சாகுபடி செய்வதின் நோக்கம், லாபம் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கினார்.

தரணி சர்க்கரை ஆலை துணை மேலாளர் ஜாகிர்உசேன் வரவேற்றார். பயிற்சி முகாமில் திரளான கரும்பு விவசாயிகள் பங்கேற்றனர்.

## ராஜபாளையத்தில் மழை

**ராஜபாளையம்,**

ராஜபாளையத்தில் திங்கள்கிழமை மாலை பலத்த இடியுடன் மழை பெய்தது. ராஜபாளையம் மற்றும் சுற்றுப்பகுதியில் பலத்த வெயில் பகலில் வாட்டி எடுத்தது. திடீர் என மாலை 4 மணிக்கு பலத்த இடிமின்னலுடன் சுமார் அரைமணிநேரம் பரவலான மழை பெய்தது. ராஜபாளையம் நகர் பகுதி, தென்றல்நகர், திருவள்ளுவர்நகர் மற்றும் சுற்றுப்பகுதியில் பெய்த பரவலான மழையால் குளிர்ச்சியான காலநிலை நிலவியது. மழையால் ராஜபாளையம் காந்திசிலை ரவுண்டானா பகுதி மற்றும் முடங்கியார் ரோட்டில் பல பகுதிகளில் மழை நீர் சாக்கடை நீருடன் கலந்து சென்றதால் பொதுமக்கள் அவதிப்பட்டனர்.

## பல்லடம் கறிக்கோழி: கொள்முதல் விலையில் மாற்றமில்லை

**பல்லடம்**,

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 81-ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் திங்கள்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 3.25, சென்னையில் ரூ. 3.57.

## ராசிபுரத்தில் ரூ.10 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

**ராசிபுரம்,**

ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.10 லட்சத்துக்கு பருத்தி விற்பனையானது.

ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில், ராசிபுரம் அருகேயுள்ள கவுண்டம்பாளையம் கிடங்கியில் பருத்தி ஏலம் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் 20-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

இதில் சுற்றுப் பகுதியைச் சேர்ந்த பருத்தி விவசாயிகள் 459 பருத்தி மூட்டைகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர்.

இதில், டிசிஹெச் ரகம் ரூ.5,580 முதல் ரூ.7,030 வரை விற்பனையானது. ஆர்சிஹெச் ரகம் ரூ.4,839 முதல், ரூ.5,319 வரை ஏலம் போனது. ஒரே நாளில் 459 பருத்தி மூட்டைகள் ரூ. 10 லட்சத்துக்கு ஏலம் போனது.

## ஊத்தங்கரை பகுதியில் முருங்கைக்காய் விலை சரிவு

**ஊத்தங்கரை,**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பகுதியில் முருங்கைக்காய் விலை சரிந்துள்ளது.

ஊத்தங்கரை பகுதியில் பரவலாகப் மழை பெய்ததால், முருங்கைக்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால், முருங்கைக்காய்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

ரூ. 2-க்கு விற்ற முருங்கைக்காய் தற்போது 30, 40 பைசாகளுக்கு விற்பனையாகிறது.

## குமரி மாவட்டமலையோர பகுதிகளில் மழை

**குலசேகரம்,**

குமரி மாவட்டத்தில் மலையோரப் பகுதிகளில் 2 நாள் இடைவெளிக்குப் பின்னர் திங்கள்கிழமை மீண்டும் மழை பெய்தது. குமரி மாவட்டத்தில் கடந்த வாரம் கோடை மழை கனமழையாக இடைவிடாது பெய்து, மாவட்டத்தைத் குளிர்வித்ததுடன், வாடிக் கிடந்த பயிர்களையும் காத்தது. மேலும், அணைகள் உள்ளிட்ட நீர் நிலைகளில் நீர்மட்டம் உயர்ந்து குடிநீர்த் தட்டுப்பாடும் விலகியது. இந்நிலையில் இரண்டு நாள்களுக்குப் பிறகு திங்கள்கிழமை பிற்பகலில் மாவட்டம் முழுவதும் கரு மேகங்கள் திரண்டிருந்தன.

ஆனால் பேச்சிப்பாறை, சிற்றாறு, களியல், குலசேகரம், திருவட்டாறு, வேர்க்கிளம்பி, சித்திரங்கோடு, சுருளகோடு உள்ளிட்டப் பகுதிகளில் மழை பெய்தது.

மழை காரணமாக மாவட்டத்தில் வாழை, நெல் உள்ளிட்ட பயிர்களைப் பயிரிட விவசாயிகள் அடுத்த பருவத்திற்காக ஆயத்தப் பணிகளில் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

## 10 ஆண்டுகளுக்குப் பிறகு கோடையில் கூடுதல் மழை

**கடலூர்,**

கடலூர் மாவட்டத்தில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு கோடை காலமான மே மாதத்தில் சராசரி அளவைவிட கூடுதலாக மழை பெய்துள்ளது.

கடலூர் மாவட்டதின் 10 ஆண்டு சராசரி மழை அளவு கடந்த 2003ஆம் ஆண்டு வரை 1,309 மி.மீ. ஆக இருந்தது. அதன்பிறகு கடந்த 2004ஆம் ஆண்டு முதல் கடந்தாண்டு வரையிலான 10 ஆண்டுகள் கணக்கீட்டின்படி மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 1,422 மி.மீ. ஆக உயர்ந்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மாவட்டத்தில் போதிய அளவில் மழை பெய்யாத நிலையில் வறட்சி நிலவி வந்தது. இந்தாண்டு, துவக்கமான ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 12 மற்றும் 21 மி.மீ. அளவே மழை பெய்தது.

அதன்பிறகு கோடை காலமான மார்ச், ஏப்ரல் மாதங்களில் மழை பெய்யாத நிலையில் மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்தது.

கடந்த 4ஆம் தேதி கத்திரி வெயில் தொடங்கிய நிலையில், வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடந்த 4ஆம் தேதி முதல் 8ஆம் தேதிவரை ஐந்து நாள்களில் மாவட்டத்தில் சராசரியாக 131.16 மி.மீ. மழை பெய்துள்ளது. இந்தாண்டு மே மாதத்தில் மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ): சிதம்பரம் 266, லால்பேட்டை 232, காட்டுமன்னார்கோவில் 219, கொத்தவாச்சேரி 177, அண்ணாமலைநகர் 171.40, சேத்தியாத்தோப்பு 171.40, புவனகிரி 160, கடலூர் 146.70, ஸ்ரீமுஷ்ணம் 135, விருத்தாசலம் 134.40, பரங்கிப்பேட்டை 133, குப்பநத்தம் 120, பெலாந்துறை 109, மே.மாத்தூர் 107,

வானமாதேவி 100.20, வேப்பூர் 90, கீழ்செருவாய் 88, தொழுதூர் 74, காட்டுமயிலூர் 58, பண்ருட்டி 34.90, லக்கூர் 27.40. கடந்த 2004ம் ஆண்டில் கடும் கோடை காலமான மே மாதத்தில் முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்வது போன்று 413 மி.மீ. மழை கொட்டியது.

அடுத்தடுத்த ஆண்டுகளில் கோடை காலத்தில் சராசரி அளவைவிட குறைவாகவே மழை பெய்து வந்த நிலையில் இந்தாண்டு மே மாதத்தில் பெய்ய வேண்டிய சராசரி அளவைவிட கூடுதலாக மாத துவக்கத்திலேயே மழை பெய்துள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மழை நீர் சேகரிப்பு புத்துயிர் பெறுமா? ஒவ்வொரு துளியிலும் ஓராயிரம் பலன்கள்**




மழை நீர் சேகரிப்பு... இத்திட்டத்திற்கு முக்கியத்துவம் தராமல், விட்டதன் பலனை, கடந்த இரண்டு ஆண்டுகளாக, கோவை, திருப்பூர் மாவட்ட விவசாயிகள் நன்றாக அனுபவித்தார்கள். விவசாய சாகுபடிக்கு உயிர் அளித்து வந்த தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை கைவிட்ட போது, நிலத்தடி நீர் கைகொடுக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர்.

ஆனால், மழை நீரை சேகரிக்காமல், நிலத்தடி நீரை தொடர்ந்து உறிஞ்சியதால், நீர் மட்டம் அகல பாதாளத்திற்கு சென்று, விவசாயிகளுக்கு அதிர்ச்சியளித்தது. ஆயிரம் அடிக்கு மேல் போர்வெல் அமைத்தும், நாளொன்று நூறு லிட்டர் தண்ணீர் கூட

கிடைக்காததால், பல ஆயிரம் தென்னை மரங்கள் கருகின. வாழ்வாதாரமாக இருந்த காய்கறி சாகுபடியை மேற்கொள்ள முடியாமல், விவசாயிகள் கடனாளியாகும் நிலைக்கு தள்ளப்பட்டனர். மழை குறித்து கவலை கொள்ளாத அனைத்து தரப்பினருக்கும், பருவமழை இல்லாமல், அணைகள் வறண்டு, குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு அதிர்ச்சியளித்தது. கிராம உள்ளூர் நீராதாரங்களான போர்வெல்கள் வற்றி, குடிநீரை விலைக்கு வாங்கும் நிலை பல்வேறு கிராம மற்றும் நகர மக்களுக்கு ஏற்பட்டது. இவ்வாறு, இரு மாவட்டங்களில் விவசாயத்தை முடக்கி, குடிநீருக்காக அலைய வேண்டிய நிலை உருவானதற்கு மரம் வளர்ப்பு மற்றும் மழை நீர் சேகரிப்பு கண்டுகொள்ளப்படாதது முக்கிய காரணமாக தற்போது உணரப்படுகிறது.

வறட்சியிலிருந்த மக்களுக்கு வங்கக்கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெய்த மழை ஆறுதல் அளித்தது. ஆனால், அது நிரந்தரமாக வறட்சியை போக்காது என்பது அனைத்து தரப்பினருக்கும் தெரியும்.

நெல், பருத்தி, கரும்பு, தென்னை, தானியப்பயிர்கள், காய்கறி பயிர்கள் என ஆண்டு முழுவதும் பசுமை காட்டிய விளைநிலங்கள் விலைக்கு விற்கப்பட்டு, லே-அவுட்களாக தொடர்ந்து மாறுவதை தடுக்க மழை நீர் சேகரிப்பு மட்டுமே கைகொடுக்கும். ஆண்டுதோறும் மழைப்பொழிவு குறைந்து வரும் நிலையில், மழை நீரை வீணடிக்காமல், விளைநிலங்களிலும், குடியிருப்புகளிலும் சேகரிக்க வேண்டியது அவசியம். விளைநிலங்களில், மழை நீரை சேகரிக்க, பண்ணைக்குட்டை அமைத்தல் உட்பட சில திட்டங்கள் இருந்தாலும், விவசாயிகளிடம் அத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு இல்லை.

கோடை மழை விரைவில் துவங்க உள்ள நிலையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மழை நீர் சேகரிப்பின் முக்கியத்துவம் கருதி, தேவையான பணிகளை மேற்கொள்ள வேண்டும். சிறு, குறு விவசாயிகளுக்கு இப்பணிகளில், அரசுத்துறைகள் உதவ வேண்டும் என்பதே இயற்கை ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது.

அரிதாய் கிடைக்கும் மழை நீரை வீணடித்து விட்டு, பல ஆயிரம் அடியில், நிலத்தடி நீரை தேடும் வழக்கம் இம்முறை மாற்றப்பட வேண்டும்.

## சென்னையில் தகிக்கிறது வெப்பம்: தமிழகத்தில் சில இடங்களில் மழை

**சென்னை**: தமிழகத்தில், சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களில், வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சென்னையில் அனல் காற்றின் தாக்கம் அதிகரித்துள்ளதால், பொதுமக்கள் பரிதவித்து வருகின்றனர்.

தமிழகத்தில், அக்னி நட்சத்திர காலம், இம்மாதம், 4ம் தேதி துவங்கி 28ம் தேதி வரை உள்ளது. இக்கால கட்டத்தில், வெயிலின் தாக்கம் வழக்கமாக அதிகரிக்கும். இருப்பினும், வங்கக் கடலில் உருவான, காற்றழுத்த தாழ்வு பகுதியின் காரணமாக, தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் மிதமானது முதல், கனமழை வரை, சில நாட்களாக பெய்தது.

### மக்கள் தவிப்பு:

மழை அதிகளவு பெய்த மாவட்டங்களில், வெப்பநிலை கணிசமாக குறைந்திருந்தது. சென்னையில் அதிகளவில் மழை இல்லாவிட்டாலும், வெப்பநிலையில் பெருமளவு மாற்றம் தென்பட்டது. இந்நிலையில், கோடை மழை குறைந்து, நின்று போன நிலையில், மீண்டும் வெப்பநிலை அதிகரிக்க துவங்கி விட்டது. இரு தினங்களுக்கு முன்பிருந்த வெப்ப நிலையை காட்டிலும், நேற்றைய வெப்பநிலையில் கடுமையான சூடு தென்பட்டது. சென்னையில், நேற்று காலை நிலவரப்படி, 38 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகி உள்ளது. இது, கடந்தாண்டை காட்டிலும், இரண்டு டிகிரி செல்சியஸ் அதிகம். தொடர்ந்து நேற்று பகலில், வெப்பநிலை மேலும், ஒரு டிகிரி அதிகரித்து, 39 டிகிரி செல்சியசாக பதிவாகி உள்ளது. இதன் காரணமாக, சென்னையில் நேற்று அனல் காற்று அதிகரித்ததால், பொதுமக்கள் தவிப்பிற்கு உள்ளாகினர். அதிகபட்சமாக, திருத்தணியில், 40, வேலூர், திருச்சி, மதுரை, 39, சேலம், தஞ்சையில், 38 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகி உள்ளது. வெப்பநிலை அதிகரிப்பிற்கு, சமீபத்தில் வங்கக் கடலில் உருவாகிய காற்றழுத்த தாழ்வு பகுதி, கரையை கடந்து, கேரளா நோக்கி சென்ற போது, காற்றின் ஈரப்பதத்தை உறிஞ்சி சென்றதும், தரைக்காற்று வீசுவதுமே காரணமாக கூறப்படுகிறது.

### மழை பொழிவு:

ஒரு புறம் வெயில் வெளுத்து கட்டினாலும், மறு புறம் தமிழகத்தின் சில பகுதிகளில், மழை பதிவாகி உள்ளது. நேற்று காலை நிலவரப்படி, அதிகபட்சமாக, நீலகிரியில் 7 செ.மீ., திருவண்ணாமலை - சாத்தனூர் அணையில், 1 செ.மீ., மழை பதிவாகி உள்ளது. 'இன்னும் இரு தினங்களுக்கு, தமிழகம் மற்றும் புதுச்சேரியில்,

ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

## விவசாய மின் இணைப்பில் மாற்றம் கொண்டுவர முடிவு

தமிழகத்தில், விவசாய மின் இணைப்பு வழங்குவது தொடர்பான சட்ட விதிகளில், திருத்தம் கொண்டு வர, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முடிவு செய்துள்ளது.

புதிய விதிகளின்படி, விவசாய மின் இணைப்பு பெற விரும்புவோர், கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு முன், மின் இணைப்பு கோரி விண்ணப்பிக்கலாம். இந்த விண்ணப்பங்கள், வரிசைப்படுத்தப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில், விண்ணப்ப தாரர்களுக்கு, புதிய மின் இணைப்பு வழங்கப்படும். முன்னுரிமை விவரங்கள், கோட்ட அளவில் பராமரிக்கப்படும். ஒரு நிலத்திற்கு, ஒரு மின் இணைப்பு பெறப்பட்டு, நிலம் பங்கீடு செய்யப்படும் போது, அரை ஏக்கருக்கு மேல் இருந்தால், புதிய மின் இணைப்பு பெற்று கொள்ளலாம். இதுபோன்ற பல்வேறு திருத்தங்கள் கொண்டு வருவதற்கான வரைவு அறிக்கை, மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. திருத்தம் தொடர்பான கருத்து, ஆலோசனை மற்றும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்புவோர், அடுத்த மாதம், 11ம் தேதிக்குள், ஆணையத்தின் முகவரிக்கு தெரிவிக்கலாம்.

## மேட்டூர் அணையில் 500 கனஅடி நீர் திறப்பு

**மேட்டூர்**: மேட்டூர் அணையில் இருந்து டெல்டா குடிநீர் தேவைக்காக, நேற்று முதல், வினாடிக்கு, 500 கனஅடி நீர் திறக்கப்பட்டு உள்ளது. மேட்டூர் அணையில் இருந்து டெல்டா குடிநீருக்காக, வினாடிக்கு, 3,000 கனஅடி நீர் திறக்கப்பட்டது. கடந்த சில நாட்களாக, மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்ததால், நீர் திறப்பு, கடந்த, 8ம் தேதி நிறுத்தப்பட்டது. இந்நிலையில், மழை தீவிரம் குறைந்த நிலையில், டெல்டா குடிநீர் தேவைக்காகவும், ஈரோட்டில், குடிநீரேற்று நிலையத்தை சுற்றி தேங்கிய சாயக் கழிவுகளை அகற்றவும், மேட்டூர் அணையில் இருந்து, நேற்று காலை முதல், வினாடிக்கு, 500 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழையால், நேற்று முன்தினம், 2,300

கனஅடியாக இருந்த, மேட்டூர் அணையின் நீர்வரத்து, நேற்று, 3,500 கனஅடியாக அதிகரித்தது. நீர்திறப்பை விட, நீர்வரத்து அதிகரித்ததால், 8ம் தேதி, 32 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று, 34 அடியாக அதிகரித்தது.

## மீன் வரத்து குறைவு: விலை கடும் உயர்வு

ராமேஸ்வரம்: ராமேஸ்வரத்தில் கரை வலை உள்ளிட்ட பாரம்பரிய வலைகள் மூலம் பிடிக்கப்படும் மீன்கள் மிக ருசியாக இருப்பதாலும், மீன்வரத்து குறைவாக இருப்பதாலும், இவற்றின் விலை ஒரு மடங்கு உயர்ந்துள்ளது.

மீன்களின் இனப்பெருக்கத்திற்காக, 45 நாட்கள் மீன்பிடி தடை அமலில் உள்ளதால், விசைப்படகுகள் கடலுக்குள் செல்லவில்லை. நாட்டுப் படகுகள் மீனவர்கள் மற்றும் ராமேஸ்வரம் ஓலைக்குடா, அக்னி தீர்த்தம், சேராங்கோட்டை, முகுந்தராயர் சத்திரம், தனுஷ்கோடி கடற்கரையில் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் மீனவர்கள் மட்டுமே கடந்த சில நாள்களாக, ஓலை வலை, நண்டு வலை, கரை வலையில் மீன்பிடித்து வருகின்றனர். நண்டு, கணவாய், வெளமீன், நகரை, ஊடகம் போன்ற ருசியான மீன்கள் அதிகமாக சிக்குவதால், இம்மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனானும், வரத்து குறைவால், கடந்த மாதம் ஒரு கிலோ ரூ.200க்கு விற்ற நகரை, வெளமீன், கௌக்கான் மீன்கள் தற்போது 300 ரூபாயாக விலை உயர்ந்துள்ளது.

### கண்மாய் மீன்களுக்கு கிராக்கி:

கடல்மீன் வரத்து இல்லாததால், கண்மாய் மீன்களுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது. ஆனால், வறட்சியால் தண்ணீரில்லாத குளம், குட்டைகளில் தேங்கி கிடக்கும் சகதிகளில் இருந்து பிடிக்கப்படும் கட்லா, தேழி மீன்கள், கிலோ ரூ. 140 முதல் ரூ.160 வரை விற்கப்படுகிறது. தற்போது பெய்துள்ள கோடை மழையால், ஓரளவிற்கு தண்ணீர் தேங்கியுள்ள குளம், குட்டைகளில் கிடக்கும் மீன்களை பிடிக்கும் முயற்சியில் மீனவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

திண்டுக்கல் மீன் வியாபாரிகள் கூறுகையில், 'கடல் மீன்களில் அதிக முட்கள் உள்ள குறிப்பிட்ட ரகங்கள் மட்டுமே விற்பனைக்கு வருகின்றன. ஓட்டல் நடத்துபவர்கள், மீன் குழம்பிற்காக, இவற்றை வாங்கிச் செல்கின்றனர். நுகர்வோர்களின் தேவையை கண்மாய் மீன்கள் தான் ஓரளவிற்கு பூர்த்தி

செய்கின்றன. வரத்து குறைவு, தேவை அதிகம் என்பதால் கண்மாய் மீன்களின் விலை உயர்ந்துள்ளது,' என்றனர்.

**மகிழ்ச்சி ! : வீராணத்தில் தேக்கிய நீரால் வெற்றிலை விவசாயிகள் : வெயில் தாக்கம், மின் பற்றாக்குறை பிரச்னை தீர்ந்தது**

காட்டுமன்னார்கோவில்: காட்டுமன்னார்கோவில் அடுத்துள்ளது வீராணம் ஏரி. இந்த ஏரியை நம்பி சுமார் 70 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்களும், வீராணம் ஏரிக்கரை கிராமங்களில் உள்ள 300 ஏக்கர் வெற்றிலை விவசாய நிலங்களும் பாசனம் பெறுகின்றன. ஏரியில் இருந்து சென்னைக்கு குடி நீர் கொண்டு செல்லப்படுகிறது.

கடந்த மாதம் வெயிலின் தாக்கம் அதிகரித்ததைத் தொடர்ந்து ஏரியில் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வந்தது. இந்நிலையில் ஏரியின் மொத்த கொள்ளவான 1465 மில்லியன் கன அடி தண்ணீரில் 560 மில்லியன் கன அடியாக குறைந்தது. ஏரியின் நீர் மட்டம் வெகுவாக குறைந்ததையடுத்து சென்னைக்குக் குடி நீர் கொண்டு செல்ல, வெற்றிலை விவசாயத்திற்குத் தண்ணீர் நிறுத்தப்பட்டது.

இதனால் வீராணம் ஏரிக்கரையில் உள்ள லால்பேட்டை, மானியம் ஆடுர், நத்தமலை, கொள்ளுமேடு, கொள்ளமலை, நெடுஞ்சசேரி புத்தார், ராயநல்லுார், சிருச்சின்னபுரம் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள 300 ஏக்கர் வெற்றிலை விவசாய நிலங்கள் தண்ணீர் இன்றி கடுமையாக பாதிக்கப்பட்டது. மேலும் கோடை துவங்கியதால் மின் நிறுத்தமும் அதிகரித்தது. இதனால் மின் மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டது.

வெற்றிலை கொடிக்கால் தண்ணீரின்றி காய்ந்தது. இந்நிலையில் இம்மாத துவக்கத்தில் யாரும் எதிர்பாரத வகையில் மேட்டூரில் இருந்து வீராணம் ஏரிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. கோடையை சமாளிக்கும் வகையில் ஏரியின் தண்ணீர் தேக்கம் அதிகரித்தது.

அதே சமயம் 4 நாட்கள், கத்திரி வெயில் துவங்கும் சமயத்தில் கடும் மழை பெய்தது. இதனால் வெற்றிலை விவசாயிகள் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தனர். இன்று வரை மழை நீர் நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ள நிலையில் கோடையைச் சமாளிக்கும் வகையில் ஏரியில் இருந்து தொடர்ந்து தண்ணீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வெற்றிலை விவசாயிகள் விவசாய பணியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போதைய நிலையில் தொடர்ந்து தண்ணீர் கிடைப்பதால் வெற்றிலை கொடிக்கால் நன்கு செழித்து வளர்ந்து நல்ல விளைச்சலை கொடுத்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## பல மாதங்களுக்கு பின் கனமழை: மக்கள் மகிழ்ச்சி

**தர்மபுரி**: தர்மபுரி நகர் மக்களை குளிவிக்கும் வகையில், பல மாதங்களுக்கு பின் நேற்று முன்தினம் இரவு, கனமழை பெய்தது. தர்மபுரி மாவட்டத்தில், வடகிழக்கு பருவ மழையை தொடர்ந்து, குறிப்பிடத்தக்க வகையில், மழை பெய்யவில்லை. இதனால், கடந்த ஃபிப்ரவரி மாதம் முதல் மாவட்டத்தில், பகல் நேரங்களில் வெயில் கொளுத்தி வந்தது. மார்ச், ஏப்ரல் மாதங்களிலும், அக்னி நட்சத்திரம் துவங்கும் வரை, தர்மபுரி மாவட்டத்தில், வெயிலின் அளவு, 100 டிகிரியை தாண்டி, கொளுத்தி வந்தது.

இதனால், மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான அணைகளில் நீர்மட்டம், வெகுவாக குறைந்து வந்தது. மேலும், மாவட்டத்தில் உள்ள முக்கிய ஏரிகள் வரண்டு வந்ததுடன், விவசாய கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் அதல பாதளத்துக்கு சென்றது. இதனால், விவசாயிகள் ஏமாற்றத்தில் இருந்தனர்.

கடந்த, நான்காம் தேதி அக்னி நட்சத்திரம் துவங்கியது, முதல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வந்தது. ஆனாலும், தர்மபுரி நகரில், குறிப்பிடத்தக்க மழை பெய்யவில்லை. இதனால், பகல் நேரங்களில், வெயிலின் அளவு கடந்த, எட்டு நாட்களில் அதிகபட்சமாக, 98 டிகிரி வெயில் அளவு பதிவானது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, தர்மபுரி நகர் உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், திடீர் என காற்றுடன் கன மழை பெய்தது. நேற்று முன்தினம் இரவு மட்டும், 22 மி.மீ., மழையளவு பதிவானது.

குறிப்பாக, தர்மபுரி நகரில் கடந்த, எட்டு நாட்களில் நேற்று முன்தினம் மழை அதிக நேரம் பெய்தது. இதனால், தர்மபுரி நகரில் உள்ள முக்கிய சாலையான நேதாஜி பைபாஸ் சாலையில், மழை நீருடன் சேர்ந்து, கழிவு நீர் ஆறாக ஓடியது. இதே போன்று, தர்மபுரி நகரின் பல்வேறு பகுதிகளில், சாக்கடை நீர் தெருக்களில் ஓடியது. இதனால், வாகனஓட்டிகள் மற்றும், பொதுமக்கள் அவதி அடைந்தனர்.

தர்மபுரி நகரில் முக்கிய சாலைகளில் உள்ள சாக்கடை கால்வாய்களில் இருந்து, மழை நேரங்களில், கழிவு நீர் வெளியேறி சாலைகளில், ஓடுவதை தடுக்க, நகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்காமல், வேடிக்கை பார்த்து வருவதாக, பொதுநல ஆர்வலர்கள் மத்தியில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பொதுமக்களின் நலன் கருதி, மழைக்காலங்களில் சாக்கடை கால்வாயில் இருந்து, கழிவு நீர் சாலையில் ஓடுவதை தடுக்க நகராட்சி நிர்வாகத்துக்கு, மாவட்ட நிர்வாகம் உத்தரவிட வேண்டுமென, சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வரவேற்பு ! : பண்ணைக் குட்டைகள் அமைக்க விவசாயிகள்... : மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்பு

**விருத்தாசலம்**: கடலூர் மாவட்டத்தில் தேசிய ஊரக வேலைத் திட்டத்தில் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படுவதற்கு விவசாயிகள் மத்தியில் வரவேற்பு கிடைத்துள்ளது.கடலூர் மாவட்டத்தில் மணிமுக்தாறு, வெள்ளாறு, கெடிலம் உள்ளிட்ட ஆறுகள் ஓடினாலும், அண்டை மாநிலங்களின் நதி நீர் பிரச்னை, கடும் வறட்சி போன்றவற்றால் நீர்வரத்தின்றி போனது. இதனால், டெல்டா பகுதிகளான சிதம்பரம், புவனகிரி, குமராட்சி, காட்டுமன்னார்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் சம்பா சாகுபடி செய்யும் விவசாயிகள் சில சமயம் திணறுகின்றனர். மேலும், கிராமங்களில் ஏரிகள், குளங்கள், ஓடைகள் ஆக்கிரமிப்பில் வேளாண் நிலங்க ளாகவும், குடியிருப்புகளாகவும் மாறின. இதனால், நிலத்தடி நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வருகிறது.

கோடை காலத்தில் விவசாயம், குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைக்கும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த மணிமுக்தாறு, கெடிலம், வெள்ளாறு உள்ளிட்ட நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் அமைக்கவும், கிராமங்களில் குளங்கள், ஏரிகள், குட்டைகள் அமைக்க மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

அதைத் தொடர்ந்து, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டை அமைக்க தமிழக அரசு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு உத்தரவிட்டது. அதைத் தொடர்ந்து கடலூர் மாவட்டத்தில் பி.டி.ஓ., அலுவலகங்கள் மூலம் கடலூர், விருத்தாசலம், பண்ருட்டி, அண்ணாகிராமம், குறிஞ்சிப்பாடி, புவனகிரி, மங்களூர், காட்டுமன்னார்கோவில்,

திட்டக்குடி, நல்லூர், கம்மாபுரம், கீரப்பாளையம், பரங்கிப்பேட்டை பகுதிகளில் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நல்லூர், வேப்பூர், சிறுபாக்கம், திட்டக்குடி, விருத்தாசலம், கம்மாபுரம் உள்ளிட்ட நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ள பகுதிகளில், இந்த பண்ணைக் குட்டைகள் அமைப்பதை விவசாயிகள் வரவேற்றுள்ளதோடு, அதற்கு ஆர்வமுடன் விண்ணப்பித்தும் வருகின்றனர்.

வேளாண் துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், "நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த ஊரக வேலைத் திட்டத்தின் மூலம் பண்ணைக் குட்டை அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டது. இதற்கு விண்ணப்பிக்கும் விவசாயிகளின் நிலங்களில், ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பண்ணைக் குட்டை அமைக்கப்படுகின்றன. மாவட்டத்தில் இது வரை 497 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. 731 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. தேர்தல் விதிமுறையால் நின்ற பணிகள், இனி மீண்டும் துவக்கப்படும்' என்றார்.

## ரூ.10 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

**ராசிபுரம்**: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,), கவுண்டம்பாளையம் குடோனில், பருத்தி ஏலம், நேற்று நடந்தது. ராசிபுரம், சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 459 பருத்தி மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

டி.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 7,030, குறைந்த பட்சமாக, 5,580, ஆர்.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 5,319, குறைந்த பட்சமாக, 4,839 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, கொங்கணாபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த, வியாபாரிகள், பருத்தியை, 10 லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுத்துச் சென்றனர்.

## கி.கிரியில் 10.2 மி.மீ., மழைப்பதிவு

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், சில வாரமாக கோடை வெயில் கொளுத்தி வந்தது. கடந்த, மே, 4ம் தேதி, அக்னி துவங்கிய நிலையில், மேலும், வெயில் கொளுத்தும் என்ற அச்சத்தில் பொதுமக்கள் இருந்தனர். கோடை வெயில் சூட்டை தணிக்கவும், உடல் உஷ்ணத்தை தணிக்கவும், ஐஸ்கிரீம் பார்லர்கள், கூல்டிரிங்க்ஸ் கடைகள், இயற்கை பழ விற்பனையகங்கள் போன்ற கடைகளை நாடினர். இந்நிலையில், கடந்த, மூன்று தினங்களாக கிருஷ்ணகிரியில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. எனினும், மழை பெய்யாததால், விவசாயிகளும், மக்களும் ஏமாற்றம் அடைந்தனர். நேற்று முன்தினம் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. நேற்று முன்தினம் மட்டும், கிருஷ்ணகிரி நகரில், 10.2 மி.மீட்டர் மழை பெய்ததால், விவசாயிகளும், மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். நேற்றும், வெயிலின் வெப்பம் தணிந்து, சற்று குளிர்ச்சியாக கிருஷ்ணகிரி நகர் காணப்பட்டதால், மக்களும், வாகனஓட்டிகளும் நிம்மதி அடைந்தனர்.

## விதை நெல்லை பரிசோதிக்க விவசாய அலுவலர் அழைப்பு

**சிவகங்கை** : ""விவசாயிகள் இருப்பு வைத்துள்ள விதை நெல்களை, விதை பரிசோதனை நிலையத்தில் கொடுத்து பரிசோதிக்கலாம்,'' என, விவசாய அலுவலர் தமிழ்செல்வி தெரிவித்தார்.

அவர் கூறியதாவது;

இந்த ஆண்டு பருவ மழை குறைந்தாலும், கிணற்று பாசன விவசாயிகள் தங்களிடம் உள்ள குறைந்த நீரை பயன்படுத்தி, நெல் சாகுபடி செய்து, அறுவடை முடிந்து, விதை நெல் இருப்பு வைத்துள்ளனர். இந்த விதை நெல்லை வைத்து மீண்டும், நெல் அறுவடையில் ஈடுபட விவசாயிகள் முன்வந்துள்ளனர். எனவே, விவசாயிகள் இருப்பு வைத்துள்ள விதை நெல்லை, சிவகங்கையில் இயங்கும் விதை பரிசோதனை நிலையத்தில் கொடுத்து, பரிசோதித்து கொள்ளலாம். அதில், நெல்லின் சுத்தத்தன்மை, முளைப்புத்திறன், விதையின் ஈரப்பதம் பரிசோதித்து தரப்படும். நெல்லுக்கு முளைப்புத்திறன் 80 சதவீதம், ஈரப்பதம் 13 சதவீதம், சுத்தத்தன்மை 98 சதவீதம் இருந்தால் மட்டுமே, தரமான விதையாக இருக்க முடியும். இதன் மூலம், அதிக மகசூல் பெறலாம். விதை நெல்லை பரிசோதனை

செய்ய, கட்டணம் ரூ.30 செலுத்தினால் போதும். முடிவுகள் வீடு தேடி தரப்படும், என, சிவகங்கை, விதை பரிசோதனை நிலைய, விவசாய அலுவலர் தமிழ்செல்வி தெரிவித்தார்.

## கால்நடைகளுக்கான நோய் வகைகள்; தொடுதிரையில் அறிய வசதி

**ராஜபாளையம்** : தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை சார்பில், கால்நடை வளர்ப்பு, நோய் வகைகள் போன்ற தகவலை, தொடுதிரை மூலம் அறிய, வசதி செய்யப்பட்டு உள்ளது.

கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை சென்னையில் உள்ளது. இதன் விரிவாக்க மையங்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளன. இந்த மையங்களில், ஆடு, மாடு, கோழி, முயல், மீன் வளர்ப்பு, பால் பொருள்கள் தயாரிப்பு போன்ற பயிற்சிகள் நடக்கும். தமிழக அரசின் இலவச ஆடு வழங்கும் திட்ட பயனாளிகள் பலர், இங்கு பயிற்சியில் சேர்கின்றனர். தொழில் முனைவோர், வேலைவாய்ப்பு இல்லாதவர்களும், இங்கு, ஏதாவது ஒரு பயிற்சி பெறுகின்றனர். கால்நடை வைத்திருப்பவர்களுக்கு, நவீனமுறையில் வளர்ப்பு, தீவனம் தயாரிப்பு, நோய் அறிகுறிகள் போன்றவற்றிற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. கால்நடை துறை நவீனமயமானதை தொடர்ந்து, அதன் விரிவாக்க மையங்களில், தொடுதிரை மூலம் தகவல் பெறும் வசதியை துவங்கி உள்ளது. தொடுதிரையை ஆன் செய்தவுடன், கறவை மாடு, வெள்ளாடு, கோழி, காடை வளர்ப்பு முறைகள் வருகிறது. இதில், கால்நடைகள் போட்டோவும் உள்ளது. தேவையான கால்நடையின் தகவல் அறிய, தொடுதிரை உள்ளே சென்றால், பண்ணை அமைவிடம், பராமரிப்பு, தீவனம் அளிக்கும் முறை, நோய் வகைகள் என, வரிசையாக வருகிறது. இதில், ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுத்தால், தேவைப்படும் தகவல் எழுத்துகளாக திரையில் வருகிறது. மற்றவர்கள் கேட்பதற்காக, ஆடியோ வசதியும் செய்யப்பட்டு உள்ளது. ராஜபாளையம் கால்நடை மருத்துவ பல்கலை மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் கதிர்வேல், ""தொடுதிரை தகவலால், மையத்திற்கு வரும் பயிற்சியாளர்கள், பல விஷயங்களை அறிந்துகொள்கின்றனர். ராஜபாளையம் சுற்றுபகுதி கிராமத்தை சேர்ந்தவர்கள், கால்நடைகளுக்கு நோய் என்றால், மையத்திற்கு வந்து தகவல் கொடுத்துவிட்டு, தொடுதிரை மூலம் மற்ற தகவலை பெறுகின்றனர். இதன் மூலம், கடந்த இருமாதங்களில், இதுவரை 100பேர் பயன் அடைந்து உள்ளனர்," என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் நீர்மட்டம் 34 அடியாக உயர்வு



**மேட்டூர்** : மேட்டூர் நீர்மட்டம் 34.31 அடியாக உயர்ந்துள்ளது.காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால், நேற்று முன்தினம் வினாடிக்கு 2,299 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை நிலவரப்படி வினாடிக்கு 3,574 கன அடியாக அதிகரித்தது.

டெல்டா மாவட்டங்களில் பெய்தமழை காரணமாக, அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டிருந்தது. நேற்று காலை முதல் மீண்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அப்போது, வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளதால், மேட்டூர் நீர்மட்டம் படிப்படியாக உயர்கிறது.

நேற்றைய நிலவரப்படி நீர்மட்டம் 34.31 அடி. நீர் இருப்பு 9.34 டிஎம்சி.

## வெங்காயம் ஏற்றுமதி மதிப்பு 25% அதிகரிப்பு



**புதுடெல்லி** : வெங்காயம் கடந்த நிதியாண்டில் ரூ.2,877 கோடி மதிப்பு அளவுக்கு ஏற்றுமதியானது. முந்தைய நிதியாண்டில் ஏற்றுமதி மதிப்பான ரூ.2,294 கோடியுடன் ஒப்பிடுகையில் இது 25% அதிகம். கடந்த நிதியாண்டில் 13.58 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதியானது. எடை அளவில் ஒப்பிடும் போது 25.46% சரிந்து 13.58 டன் ஆகியுள்ளது.மேலும், உள்ளூர் சந்தையில் தட்டுப்பாட்டை போக்க வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டது. கடந்த செப்டம்பரில் வெங்காயத்துக்கான குறைந்த பட்ச ஏற்றுமதி விலை 350 அமெரிக்க டாலரில் இருந்து 150 டாலர்களாக குறைக்கப்பட்டதை தொடர்ந்து ஏற்றுமதி அதிகரித்தது.

## கடலைப் பருப்பு விலை குறைந்தது



**விருதுநகர்** : உளுத்து வரத்து குறைவால் உளுத்தம் பருப்பு மூட்டைக்கு ரூ.600 விலை உயர்ந்துள்ளது. கடலை எண்ணெய் டின்னுக்கு ரூ.10ம், பாமாயில்

டின்னுக்கு ரூ.15ம், நிலக்கடலை பருப்பு மூட்டைக்கு ரூ.50ம் குறைந்துள்ளது.தஞ்சை மற்றும் பர்மாவில் இருந்து வரும் உளுந்து திடீரென்று நின்று போனது. இதனால் உளுத்தம் பருப்பு (100கிலோ) மூட்டைக்கு ரூ.600 உயர்ந்துள்ளது.உளுந்து லயன் ரூ.5,600 லிருந்து ரூ.6,400, உளுந்து பர்மா உளுந்து பருவட்டு ரூ.5,200 லிருந்து ரூ.6,000, பர்மா உளுந்து பொடி ரூ.4,800 லிருந்து ரூ.5,600, உளுந்தம்பருப்பு லயன் ரூ.7,600லிருந்து ரூ.8,200, உளுந்தம் பருப்பு பர்மா பருவட்டு ரூ.6,400 லிருந்து ரூ.7,000,உளுத்தம் பருப்பு பர்மா பொடி ரூ.6,000 லிருந்து ரூ.6,600, தொளி உளுந்து ரூ.6,000 லிருந்து ரூ.6,600 என உயர்ந்துள்ளது. நிலக்கடலைப் பருப்பு (80 கிலோ) மூட்டை ரூ.4,250 லிருந்து ரூ.4,200, கடலை எண்ணெய் டின் (15 கிலோ) ரூ.1,320 லிருந்து ரூ.1,310, பாமாயில் (15 கிலோ) டின் ரூ.1,000 லிருந்து ரூ.985 குறைந்துள்ளது.

## ரூ.2.52 கோடிக்கு தேயிலை விற்பனை



**கோவை** : கோவை தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டின் 18வது வாரத்திற்கான ஏலத்திற்கு உள்ளூர் ரகம் (டஸ்ட்) 2.40 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 1.99 லட்சம் கிலோ விற்பனையானது. சராசரி விற்பனை விலை கிலோ ரூ.96.18. விற்பனை மதிப்பு ரூ.1.92 கோடி. ஏற்றுமதி ரகம்(லீப்) 99 ஆயிரம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 74 ஆயிரம் கிலோ விற்பனையானது. சராசரி விற்பனை விலை ரூ.81.08. விற்பனை மதிப்பு ரூ.60 லட்சம்.கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் இந்தவாரம் ரூ.2.52 கோடிக்கு விற்றுள்ளது.

**அண்ணா பல்கலையில் நீர் மேலாண்மை படிப்பு விவசாயிகளுக்கு மானிய உதவிகள்**



**சென்னை** : கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டு, கட்டிடங்கள் கட்டடப்படுகிறது. விவசாயிகள் நகரங்களில் குடியேறி வருகின்றனர். இதனால் விவசாயம் சார்ந்த படிப்புகள் குறைந்து, பொறியியல் மற்றும் கட்டிட கலை சார்ந்த படிப்புகளில் மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். சென்னை அண்ணா பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான தொழில்நுட்ப வல்லுனர்கள், கட்டிட கலைஞர் கள், பொறியியல் சார்ந்த வல்லுனர்களை மட்டுமின்றி, விவசாய மாணவர்களையும், நீர்வள மேம்பாட்டு மாணவர்களையும் உருவாக்கி வருகிறது.அண்ணா பல்கலையில், 1979 மே மாதம் நீர் வளஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டது. இதன் மூலம், பி.இ., விவசாயம் மற்றும் நீர்ப்பாசான பொறியியல் படிப்பு நடத்தப்படுகிறது. 4 ஆண்டு படிப்பான இதில், 40 மாணவர்கள் படிக்கின்றனர். எம்.இ., நீர்விசை மற் றும் நீர்வள மேலாண்மை படிப்பு, நீர்ப்பாசானம் மற்றும் நீர் மேலாண்மை, நீர்வள மேலாண்மை ஆகிய படிப்புகள் வழங்கப்படுகிறது. இரண்டாண்டு படிப்பான இதில், 25 மாணவர்கள் படிக்கின்றனர். இந்த படிப்புகளுக்கான கவுன்சலிங் தனியாக நடத்தப்படும். நீர்வள ஆராய்ச்சி மையம் மூலமாக, தண்ணீரை வளப்படுத்துதல், சேமித்தல், குடிநீருக்கு விவசாயத்துக்கு பயன்படுத்துதல் குறித்து பல்வேறு ஆராய்ச்சிகள் நடந்து வருகிறது. பல்கலை வளாகத்தில் ஒரு பகுதியை தேர்ந்தெடுத்து, சொட்டு நீர் பாசன முறைப்படி பல்வேறு காய்கறிகள் வளர்க்கப்பட்டு பரிசோதனை

செய்யப்படுகிறது. காய்கறி வளர்ப்பு, அதற்கான நீர், உரம், காய்கறியின் தரம், அளவு குறித்தும் ஆராய்ச்சி நடக்கிறது. தற்போது வெண்டை மற்றும் தர்பூசணி பயிரிடப்பட்டுள்ளது.இத்திட்டத்தின் மூலம், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க எக்டேருக்கு அதிகபட்சமாக ரூ.97,598, பெரு விவசாயிகளுக்கு ரூ.73,198ம் மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு உயர்ரக விதைகள் வாங்குவதற்கு ஒரு எக்டேருக்கு அதிகபட்சம் ரூ.15 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. ஒரு விவசாயி 0.2 எக்டேர் முதல் அதிகபட்சமாக 5 எக்டேர் வரை சொட்டுநீர் பாசன முறையை அமைக்கவும், விதைகள் வாங்கவும் மானியம் பெறலாம்.

இதுகுறித்து அண்ணா பல்கலை நீர்வள மைய பேராசிரியரும், முதன்மை திட்ட செயலருமான மாதவி கணேசன் கூறியதாவது:சொட்டு நீர் பாசன முறைப்படி, விவசாய நிலத்தில் பாத்தி அமைத்து, சொட்டு நீர் பாசன குழாய்கள் அமைக்கப்படும் பின்னர், பாத்தி மற்றும் குழாய் மீது ஒருவித ஷீட் கொண்டு மூடப்படும். அந்த ஷீட்டில் சிறு துளைகள் போட்டு அதில் செடிகள் நடப்படும். இந்த ஷீட் போட்டு சொட்டுநீர் குழாய்களை மூடுவதால் ஈரப்பதம் எப்பொழுதும் இருக்கும். செடிக்கு தேவையான உரம் மற்றும் பூச்சி கொல்லி சொட்டுநீர் பாசனம் மூலமே சரியான விகிதத்தில் தரப்படுவதால் செலவு மிச்சமாகும், மகசூலும் அதிகரிக்கும்.காஞ்சிபுரத்தில் 22 எக்டேர் நிலம், திருவள்ளூரில் 2.8 எக்டேர் நிலம், கோவையில் 33 எக்டேர் நிலத்துக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தில் காய்கறிகள், தர்பூசணி போன்றவை பயிரிடப்பட்டுள்ளது. சாதாரண முறையில் ஒரு எக்டேருக்கு 9 டன் காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், சொட்டுநீர் பாசன முறையின் மூலம் 17 முதல் 25 டன் வரை காய்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

### சொட்டு நீர் பாசன முறை

காய்கறி விவசாயத்தில் சொட்டு நீர்ப்பாசன முறைக்காக, 1.2 மீட்டர் இடைவெளியில் இரண்டு டியூப்புகள் போடப்படும். ஒரு டியூப்பில் 60 செ.மீ. இடைவெளியில் துளை இடப்பட்டிருக்கும் இதிலிருந்து செடிகளுக்கு தேவையான நீர் வெளியேறியபடி இருக்கும்.மானிய தொடர்புக்கு: சொட்டுநீர்ப்பாசன முறைக்கு மானியம் பெற, பேராசிரியர் மாதவி கணேசன், முதன்மை திட்ட செயலர், நீர்வள மையம், அண்ணா பல்கலை, தொலைபேசி 044-22357458, 9940245288 என்ற

எண்ணை தொடர்பு கொள்ளலாம். மேலும், ராம்ஜி, துணை திட்ட செயலர், நீர்வள மையம், அண்ணா பல்கலை, தொலைபேசி 044-22357456 என்ற எண்ணையும் தொடர்பு கொள்ளலாம்.

## போச்சம்பள்ளி வாரச்சந்தையில் ஆடுகள் விலை உயர்வு ரூ.1.12 கோடிக்கு விற்பனை

**போச்சம்பள்ளி:** போச்சம்பள்ளி வாரச்சந்தை நேற்று ஆடு விற்பனை களை கட்டியது. இதன் மூலம் ஒரேநாளில் கி1.12 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் வாரச்சந்தை பிரசித்தி பெற்றதாகும். இங்கு குண்டூசி முதல் தங்கம் வரை விற்பனை செய்யப்படுவதால் மாவட்டம் முழுவதிலுமிருந்து மக்கள் பெருமளவில் வந்து பொருட்களை வாங்கிச்செல்வது வழக்கம். அக்னி நட்சத்திரம் தொடங்கியதையடுத்து கடந்த வாரம் நடைபெற்ற சந்தையில் கூட்டம் குறைவாக காணப்பட்டது. இதையடுத்து, தொடர்ந்து மழை பெய்ததாலும், சுற்றுவட்டார பகுதிகளில் திருவிழாக்கள் நடந்து வருவதாலும் போச்சம்பள்ளியில் நேற்று கூடிய சந்தை களை கட்டியது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மற்றும் செங்கம், திருப்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் விற்பனைக்கு வந்திருந்தன. வழக்கத்தை விட நேற்று ஆடுகள் விற்பனை அமோகமாக இருந்தது. போச்சம்பள்ளி மற்றும் சுற்றுபுற கிராமங்களில் உள்ள கோயில்களில் சித்திரை திருவிழாக்கள் நடந்து வருகின்றன. இதனால் பொதுமக்கள் ஆடுகளை போட்டிபோட்டு வாங்கிச் சென்றனர். கடந்த வாரம் 10 கிலோ எடை கொண்ட ஆடு கி3 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று அவை கி3500 முதல் கி3750 வரையில் விற்பனையானது. இதன் மூலம் நேற்று ஒரேநாளில் கி1.12 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது. போச்சம்பள்ளி பகுதியில் நிலவும் கடும் வறட்சியால் கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்காமல் ஆடு, மாடுகளை விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்பனை செய்து வந்தனர். இந்நிலையில் இந்த வாரம் சந்தையில் ஆடுகள், கூடுதல் விலைக்கு விலைபோனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## அன்னாசிப்பழம் வரத்து அதிகரிப்பு

**சேலம்**: கேரளாவில் அன்னாசி பழம் அறுவடை சீசன் துவங்கியுள்ளதால், சேலம் மார்க்கெட்டுக்கு 5 டன் அன்னாசி பழம் விற்பனைக்கு வருகிறது. தென்னிந்தியாவில் கேரளா மற்றும் தமிழகத்தில் கொல்லிமலையில் அன்னாசி பழம் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது கேரளாவில் அன்னாசி பழம் நல்ல விளைச்சலை தந்துள்ளது. இதனால் கேரளாவில் இருந்து சேலம் மார்க்கெட்டுக்கு லாரிகள் மூலம் அன்னாசி பழம் வந்து கொண்டிருக்கிறது. அன்னாசி பழத்தின் வரத்து அதிகரித்துள்ளதால் விற்பனை சூடுபிடித்துள்ளது. இது குறித்து அன்னாசிபழ வியாபாரிகள் கூறியதாவது: கேரளாவில் அன்னாசி பழம் அறுவடை சீசன் துவங்கியுள்ளது. சேலத்திற்கு இரண்டு நாட்களுக்கு ஒருமுறை 5 டன் அன்னாசி பழங்கள் விற்பனைக்கு வருகிறது. அன்னாசிபழத்தின் விலை சற்று அதிகமாக இருந்தாலும் வாடிக்கையாளர்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர். கொல்லிமலையில் இருந்து அன்னாசிப்பழத்தின் வரத்து சுமராக உள்ளது. இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள் வினியோகம்

**தர்மபுரி**: தர்மபுரி வேளாண் உதவி இயக்குனர் ரவிகுமார் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: தர்மபுரி வட்டார விவசாயிகளுக்கு நடப்பு காரீப் பருவத்துக்கு பயன்படும் வகையில் தரமான சான்று பெற்ற நெல், உளுந்து, துவரை, கேழ்வரகு, நிலக்கடலை, காராமணி விதைகள் மானிய விலையில் வழங்க தர்மபுரி துணை வேளாண் விரிவாக்க மையம், கிருஷ்ணாபுரம் வேளாண் விரிவாக்க மையங்களில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த விதைகள் பல்வேறு மானிய திட்டங்கள் மூலம் தர்மபுரி வட்டார விவசாயிகளுக்கு வழங்கப்படும். நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு கந்தக சத்தினை அளிக்கவும், மண்ணில் உள்ள கலர் உவர் நிலங்களுக்கு ஜிப்சம் 50 சதம் மானிய விலையில் வழங்கவும் போதுமான இருப்புவைக்கப்பட்டுள்ளது. எனவே தேவையான விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களையே அல்லது தர்மபுரி வேளாண்மை விரிவாக்க மையத்தையோ அணுகி பெற்றுக்கொள்ளலாம் என வேளாண் உதவி இயக்குனர் ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

**கிருஷ்ணகிரியில் பலத்த மழை பொதுமக்கள் மகிழ்ச்சி**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில் நேற்று மாலை 15 நிமிடம் பலத்த மழை பெய்தது. இதனால், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். கிருஷ்ணகிரியில் கடந்த சில தினங்களாக விட்டு, விட்டு ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இதனால் பொதுமக்கள், குறிப்பாக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்த மழையால் கிணறுகளுக்கோ, ஏரிக்கோ தண்ணீர் ஏதும் வராத நிலையில் செடி, கொடிகளுக்கு இந்த மழை உயிர்கொடுப்பதாக உள்ளது.

இந்நிலையில், நேற்று காலை வெயில் சுட்டெரித்த நிலையில், மாலை திடீரென வானில் கரிய மேகக்கூட்டங்கள் திரண்டன. இதையடுத்து, கிருஷ்ணகிரி பகுதியில் கனத்த மழை பெய்தது. மாலை 3.45 மணி முதல் 4 மணி வரை பெய்த மழையால் சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால், வாகனங்கள் முகப்பு விளக்கை எரியவிட்டாறு சென்றன. சாலையோரம் கடை வைத்திருந்தவர்கள் சிறிது நேரம் பாதிப்பிற்குள்ளாகினர். இந்த மழையால் வெப்பம் திணந்து குளிர்ந்த காற்று வீசியது. பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

**தொடர் கோடை மழையால் தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி சுற்று வட்டார பகுதிகளில் தற்போது பெய்து வரும் கோடை மழையால் தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பொள்ளாச்சி ஆனை மலை, வேட்டைக்காரன் புதுர், சேத்துமடை, கோட்டூர், ஆழியார் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் தென்னை சாகுபடி செய்கின்றனர். ஆண்டு தோறும் கோடை காலம் துவங்கி வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் போது வறட்சி ஏற்பட்டு தென்னை மரங்கள் பாதிப்புக்குள்ளாகும். கடந்த சில மாதங்களாக வறட்சியால் தென்னை மரங்களில் மட்டைகள் கருகி, குருத்துக்களும் அதிகளவில் உதிர்ந்ததால் தென்னை விவசாயிகள்வேதனையடைந்தனர். இந்நிலையில், கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக கோடை மழை தொடர்ந்து பெய்தது. இதனால், தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து தென்னை விவசாயிகள் கூறுகையில், ஆண்டு தோறும் கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து, தென்னை மரங்களை

காப்பாற்ற பெரும் முயற்சிகளை மேற்கொள்வோம். அந்நேரங்களில், போதுமான தண்ணீர் கிடைக்காததால் சொட்டு நீர் பாசனம் உள்ளிட்ட முறைகளை பின்பற்றி தென்னை மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவோம். பல இடங்களில் தென்னை மரங்கள் முழுவதுமாக காய்ந்து மரமே பட்டு போயுள்ளது. தற்போது ஒரு வாரத்துக்கும் மேலாக கோடை மழை பெய்துள்ளதால், ஆறுதலை கொடுத்துள்ளது. இந்த மழை தொடர்ந்து பெய்தால் தென்னை மரங்களை முழுமையாக காப்பாற்றி விடலாம் என்றனர்.

## <u>தொடர்மழையால் காய்கறி விற்பனைபாதிப்பு</u>

கோவை: கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் கோவை தடாகம் ரோட்டில் உள்ள எம்.ஜி.ஆர் மார்க்கெட்டில் காய்கறி விற்பனை 50 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது.

கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள எம்.ஜி.ஆர் மார்க்கெட்டுக்கு கர்நாடாகவில் இருந்து பச்சை மிளகாய், சின்னவெங்காயம், பெரியவெங்காயம், பீன்ஸ், காரட், காலிபிளவர், முட்டைகோஸ் உள்ளிட்ட காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

அதேபோல் கோவை சுற்றுவட்டாரத்தில் உள்ள ஆலாந்துறை, செம்மேடு, நரசீபுரம், தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு பகுதிகளில் இருந்து தக்காளி, வெண்டை, அவரை, கத்தரி உள்ளிட்ட நாட்டுக்காய்கறிகள் வருகின்லைவர் பாலசுப்பிரமணியம் (கோவை மாவட்ட இரும்பு வியாபாரிகள் சங்கம்) தலைமை வகித்தார். துவக்க விழா நிகழ்ச்சியில் பண்ணாரியம்மன் குழும தலைவர் எஸ்.வி.பாலசுப்பிரமணியம் முதன்மை விருந்தினராகவும், இந்திய தொழில் வர்த்தக சபை தலைவர் பாலசுந்தரம், சிறுதுளி நிர்வாக அறங்காவலர் வனிதாமோகன் ஆகியோர் கவுரவ விருந்தினர்களாகவும் பங்கேற்று குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசினர்.

இதில் பண்ணாரியம்மன் குழும தலைவர் எஸ்.வி.பாலசுப்பிரமணியம் பங்கேற்று பேசுகையில்,' சமூகசேவை நோக்கத்தோடு வணிக சங்கங்களின் கூட்டமைப்பு அதன் தாய் கழகத்தில் இருந்து துவங்கியுள்ளது. வர்த்தகர்கள் பல இடங்களில் உற்பத்தியாகும் பொருட்களை வாங்கி ஒன்றிணைத்து வாடிக்கையாளர்களுக்கு

வழங்குகின்றனர். சில்லரை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீடு போன்ற பல பிரச்னைகளை வர்த்தகர்கள் எதிர்நோக்குகின்றனர். வர்த்தகர்கள் தங்களுக்கு ஏற்படும் பிரச்னைகள் குறித்து கலந்தாலோசித்து, அதற்கு சரியான தீர்வை கண்டறிந்து அரசிடமும் எடுத்துச் செல்ல இவ்வமைப்பு துணை நிற்கும்,' என்றார். இந்நிகழ்ச்சியில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் பாலசுப்பிரமணியம் (கோவை மாவட்ட இரும்பு வியாபாரிகள் சங்கம்), துணை தலைவர்கள் ஏஎல்எஸ் அழகப்பன் (கோயமுத்தூர் பைப் வியாபாரிகள் சங்கம்), சுப்பிரமணியம் (கோவை மாவட்ட பர்னிச்சர் வியாபாரிகள் சங்கம்), சுரேஷ்பாபு (கோயமுத்தூர் சானிடரிவேர் டீலர் சங்கம்), செயலாளர்கள் சி.பாலசுப்பிரமணியன் (பேப்பர் வியாபாரிகள் சங்கம்), சுனில் கே.தெக்ச்ந்த்னி(கோயமுத்தூர் பைப் வியாபாரிகள் சங்கம்), இணை செயலாளர்கள் ஜெயக்குமார் பழனிசாமி(தமிழ்நாடு பேரிங் வர்த்தக சங்கம்), நடராஜன் (கோயமுத்தூர் மெட்டல் வியாபாரிகள் சங்கம்), பொருளாளர் அனந்த பத்மநாபன் (கோயமுத்தூர் மாவட்ட எலக்ட்ரிகல் வர்த்தகர் சங்கம்) ஆகிய புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்று பேசினர்.

வணிகர்களுக்கு வாணிபத்தில் அவ்வப்போது ஏற்படக்கூடிய நடைமுறைச்சிக்கல்களை அரசிடம் முறையிட்டும், அரசின் பல்வேறு துறைகளை தொடர்பு கொண்டு சங்கங்களுக்கு உரிய விளக்கங்களை பெறவும், மத்திய மற்றும் மாநில அரசின் சட்ட திட்டங்களை பற்றிய விழிப்புணர்வை வணிகர்களுக்கு ஏற்படுத்தவும் இச்சங்கம் துவக்கப்பட்டுள்ளது.

தலைவர் பாலசுப்பிரமணியம் (கோவை மாவட்ட இரும்பு வியாபாரிகள் சங்கம்) தலைமை வகித்தார். துவக்க விழா நிகழ்ச்சியில் பண்ணாரியம்மன் குழும தலைவர் எஸ்.வி.பாலசுப்பிரமணியம் முதன்மை விருந்தினராகவும், இந்திய தொழில் வர்த்தக சபை தலைவர் பாலசுந்தரம், சிறுதுளி நிர்வாக அறங்காவலர் வனிதாமோகன் ஆகியோர் கவுரவ விருந்தினர்களாகவும் பங்கேற்று குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசினர்.

இதில் பண்ணாரியம்மன் குழும தலைவர் எஸ்.வி.பாலசுப்பிரமணியம் பங்கேற்று பேசுகையில்,' சமூகசேவை நோக்கத்தோடு வணிக சங்கங்களின் கூட்டமைப்பு அதன் தாய் கழகத்தில் இருந்து துவங்கியுள்ளது. வர்த்தகர்கள் பல இடங்களில் உற்பத்தியாகும் பொருட்களை வாங்கி ஒன்றிணைத்து வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றனர். சில்லரை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீடு போன்ற பல

பிரச்னைகளை வர்த்தகர்கள் எதிர்நோக்குகின்றனர். வர்த்தகர்கள் தங்களுக்கு ஏற்படும் பிரச்னைகள் குறித்து கலந்தாலோசித்து, அதற்கு சரியான தீர்வை கண்டறிந்து அரசிடமும் எடுத்துச் செல்ல இவ்வமைப்பு துணை நிற்கும்,‘ என்றார். இந்நிகழ்ச்சியில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் பாலசுப்பிரமணியம் (கோவை மாவட்ட இரும்பு வியாபாரிகள் சங்கம்), துணை தலைவர்கள் ஏஎல்எஸ் அழகப்பன் (கோயமுத்தூர் பைப் வியாபாரிகள் சங்கம்), சுப்பிரமணியம் (கோவை மாவட்ட பர்னிச்சர் வியாபாரிகள் சங்கம்), சுரேஷ்பாபு (கோயமுத்தூர் சானிடரிவேர் டீலர் சங்கம்), செயலாளர்கள் சி.பாலசுப்பிரமணியன் (பேப்பர் வியாபாரிகள் சங்கம்), சுனில் கே.தெக்ச்ந்த்னி(கோயமுத்தூர் பைப் வியாபாரிகள் சங்கம்), இணை செயலாளர்கள் ஜெயக்குமார் பழனிசாமி(தமிழ்நாடு பேரிங் வர்த்தக சங்கம்), நடராஜன் (கோயமுத்தூர் மெட்டல் வியாபாரிகள் சங்கம்), பொருளாளர் அனந்த பத்மநாபன் (கோயமுத்தூர் மாவட்ட எலக்ட்ரிகல் வர்த்தகர் சங்கம்) ஆகிய புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்று பேசினர்.

வணிகர்களுக்கு வாணிபத்தில் அவ்வப்போது ஏற்படக்கூடிய நடைமுறைச்சிக்கல்களை அரசிடம் முறையிட்டும், அரசின் பல்வேறு துறைகளை தொடர்பு கொண்டு சங்கங்களுக்கு உரிய விளக்கங்களை பெறவும், மத்திய மற்றும் மாநில அரசின் சட்ட திட்டங்களை பற்றிய விழிப்புணர்வை வணிகர்களுக்கு ஏற்படுத்தவும் இச்சங்கம் துவக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோவையில் கடந்த 3 நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் காய்கறி விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரங்களில் 1300 டன் விற்பனையான காய்கறிகள் நேற்றைய நிலவரப்படி 500 டன் மட்டுமே விற்றது. காய்கறி விற்பனை மந்தமடைந்துள்ளதால் வியாபாரிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் ராஜேந்திரன் கூறுகையில், ‘கடந்த 3 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் காய்கறி வரத்து பெருமளவு குறைந்துள்ளது. மழையில் நனைய வேண்டுமென்பதால் நுகர்வோர் மார்க்கெட்டுக்கு வருவதும் தடைபட்டிருக்கிறது. இதனால், தினமும் 1300 டன் விற்கவேண்டிய மார்க்கெட்டில் 500 டன் காய்கறிகள் மட்டுமே விற்கிறது.’ என்றார்.

## திருச்சியில் 103 டிகிரி வெயில் தாக்கம் அதிகரிக்கும் வானிலை ஆராய்ச்சி மையம் தகவல்

**திருச்சி-**: மழை படிப்படியாக குறைந்ததால் திருச்சியில் வெயிலின் தாக் கம் அதிகரிக்க கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. திருச்சியில் நேற்று 103 டிகிரி வரை வெயில் பதிவாகியுள்ளது. தமிழகம் முழுவதும் மார்ச் மாதம் தொடக்கத் தில் இருந்தே வெயிலின் தாக்கம் அதிகம் இருந்து வந் தது. இதனால் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் 100 டிகிரிக்கு குறையாமல் வெயில் அளவு பதிவாகி இருந்தது. திருச்சியில் அதிகபட்சமாக வெயில் 107 டிகிரி வரையிலும் பதிவா னது. கடந்தாண்டு திருச்சியில் 109 டிகிரி வரையிலும் வெப்பம் பதிவாகியிருந்தது. இதில் கத்திரி வெயில் என அழைக்கப்படும் அக்னி நட்சத்திர காலத்தில் 113 டிகிரி வரை பதிவான நிலையில் கோடை மழை கைகொடுத்ததால் உக்கிர வெயிலில் இருந்து திருச்சி மக்கள் தப் பினர். இதேபோல் இந்த வருடமும் கோடைமழை கை கொடுத்தால் தவிர திருச்சியில் 113 டிகிரி வெயி லில் இருந்து தப்பிக்க வாய் ப்பு உள்ளது என பொது மக் கள் எதிர்பார்ப்பில் இருந்தனர்.

இந்நிலையில் இலங் கையை ஒட்டி வங்க கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானதால் குமரிக்கடல் பகுதியையொட்டி தென்தமிழகத் தில் பல இடங்களில் பலத்த மழை பெய்தது. இதில் எதிர்பாராத அளவில் திருச்சி மாவட்டத்தில் கடந்த 5ம் தேதி முதல் தொடர்ந்து லேசான மழை பெய்யத் துவங்கியது. 6ம் தேதி காலை வரையிலும் குறைந்த பட்சமாக 118.90 மி.மீ மழை பதிவாகியிருந் தது. அன்று நள்ளிரவு முதல் 7ம் தேதி விடிய, விடிய மழை பெய்ததில் அதிக பட்சமாக 594 மி.மீ மழை பதிவாகி இருந்தது. இந்நிலையில் 8 தேதி மதியம் 4 மணியளவில் பயங்கர சூறாவளி காற்று டன் இடை விடாது கனத்த மழை பெய்தது. 809 மி.மீ வரை மழை பெய்ததால் பொதுமக்கள் மட்டுமல்லாமல் விவசாயிகளும் மகிழ்ச்சியில் இருந்தனர்.

அதனைத் தொடர்ந்து மழை கொஞ்ச, கொஞ்சமாக குறைந்ததால் 9ம்தேதி காலை 8மணி வரை குறைந்த பட்சமாக 348 மி.மீ மழை பதிவானது. தொடர் ந்து திருச்சி மாவட்டத்தில் மழை படிப்படியாக குறைந்ததால் நேற்றுமுன்தினம் முதலாக வெயிலின் தாக்கம் மீண்டும் அதிகரிக்க தொட ங்கியது. நேற்று 103 டிகிரி வரை வெயில் பதிவான தால் பொதுமக்கள் வெயி லின் கொடுமையை மீண் டும் அனுபவித்து வருகின்றனர்.

இலங்கை அருகே உரு வான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை வலுவடைந்து மண்டலமாகி, கன்னியாகுமரி அருகே சென்று பின் னர் கர்நாடகா அருகே கரையை கடந்தது. எனவே தமிழகத்தில் ஒரு சில இடங்களில் தான் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

குறைந்தழுத்த தாழ்வு நிலை, தாழ்வு மண்டலம் தமிழகம் மற்றும் இலங்கை அருகே இருந்தபோது கட லில் இருந்து நிலத்தை நோக்கி காற்று வீசியது. இத னால் வெப்பம் நன்றாக தணிந்து காணப்பட்டது. ஆனால் இப்போது காற்று திசை மாறி வீசுகிறது. கட லில் இருந்து காற்று வீசா மல், நிலத்தில் இருந்து காற்று வீசுவதோடு வெப்ப மும் நிலவி மழையும் திடீர் குறைந்ததால் வெயி லின் அளவு படிப்படியாக உயர் ந்து மேலும் வெப்பம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவிக்கிறது.

## நத்தம் பகுதியில் மழை 'மா' விவசாயிகள் மகிழ்ச்சி

**நத்தம்** : நத்தம் பகுதியில் பெய்த தொடர் சாரல் மழையால் மா விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நத்தம் பகுதிகளில் கடந்த வருடம் போதிய பருவமழை பெய்யாமல் போனது. இதனால் கடந்த 3 மாதங்களாக கடும் வறட்சியால் மா மரங்கள் பாதிக்கப்பட்டன. ஒருசில மரங்கள் நல்ல பருவத்தில் இருந்த போதும், பலன் தரும் நிலையில் காய்ந்து பட்டுப்போனதால் விவசாயிகள் மிகுந்த மனவேதனை அடைந்தனர்.

தங்கள் நிலங்களில் ஆழ் துளை கிணறு அமைத்தும் தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால் தண்ணீர் டேங்கர் லாரி களில் நீரை விலைக்கி வாங்கி மரங்களுக்கு பாய்ச்சி காப்பாற்றி வந்த னர். இந்நிலையில், சீசனையொட்டி மரங்களில் மாங்காய்கள் காய்த்தும் நீர்ச்சத்து இல்லாததால் திரட்சி இல்லாமல் இருந்தது. கடந்த வாரம் தொடர்ந்து பெய்த சாரல் மழையால் மாங்காய்கள் திரட்சியாக விளைய வாய்ப்புள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து மா விவசாயி முத்துமுகமது கூறுகையில், Ôதண்ணீர் முழுமையாக கிடைத்து மாங்காய் விளைந்தால் காய் ஒன்று அரை கிலோ வரை இருக்கும். ஆனால் போதிய மழை இல்லாததால் அதிகபட்சமாக காய் ஒன்று 250 கிராம் மட்டுமே இருந்தது. கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த மழையால் காய்களின் எடை உயர வாய்ப்புள்ளதுÕ என்றார்.

## <u>ரூ.4 கோடியில் மீன்பிடி இறங்குதளம்</u>

**ராமநாதபுரம்**: தேவிபட்டினம் கடற்கரையில் ரூ. 4.02 கோடி மதிப்பில் அனைத்து வசதிகளுடன் மீன்பிடி இறங்குதளம் கட்டும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. ராமநாதபுரம் மாவட்டம் தேவிபட்டினம் கடற்கரையில் தற்போது மீன்பிடி இறங்கு தளம், ஏலம் விடும் இடம் போன்ற வசதிகள் இல்லை. மீனவர்களுக்கு வலை பின்னவும், ஓய்வெடுக்கவும் கட்டிக் கொடுத்த கட்டிடங்கள் சேதமடைந்து காணாமல் போய்விட்டன. தற்போது மீன்துறை சுனாமி திட்டத்தில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.4.02 கோடி மதிப்பில் மீன்பிடி இறங்கு தளம் கட்டும் பணியை செய்து வருகிறது.

தேவிபட்டினம் கடற்கரையில் இதற்கான பணிகள் கடந்த 8 மாதங்களாக நடந்து வருகின்றன. இங்கு வலை பின்னும் கூடம் 2, மீன் ஏலம் விடும் இடம் ஒன்று, சுகாதார வளாகம்(கழிப்பறை வசதி), 600 மீட்டரில் சாலைகள், 300 மீட்டரில் சுற்றுச்சுவர் கட்டும் பணி நடந்து வருகிறது. இதில் ரூ. 3 கோடி மதிப்பில் பணிகள் முடிவடைந்துள்ளன. மீன் உலர் களங்கள்(கருவாடு காயப்போடும் இடம்) 2 கட்டிடம் கட்டுவதற்கு இடம் கையகப்படுத்தாததால் இப்பணி நடைபெறவில்லை. மேலும் இங்கு தண்ணீர் வசதிக்கு ஆழ்குழாய் கிணறும் ஏற்படுத்தப்பட உள்ளது. இப்பணிகள் முடிந்து மீன் இறங்குதளம் தேவிபட்டினத்தில் செயல்பட்டால், தேவிபட்டினம் மட்டுமல்லாது சுற்றுவட்டார மீனவ கிராமங்களும் பயன்பெறும். தற்போது முடிவீரன்பட்டினம், இரணியன்வலசை, பழனிவலசை, சங்குமால், தர்ஹாதோப்பு, கண்ணாமுனை, முத்துரெகுநாதபுரம் மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீனை அந்தந்த கடற்கரையிலேயே இறக்குகின்றனர். அங்கு போதிய வசதியின்றி கடலில் இருந்து கரைக்கு மீனை கொண்டு வரவும், ஏலம் விடவும் சிரமப்படுகின்றனர்.

இந்த அனைத்து மீனவ கிராமங்களும் பயன்பெறும் வகையில் தற்போது தேவிபட்டினத்தில் மீன்பிடி இறங்குதளம் கட்டப்படுகிறது. இப்பணி முடிந்தால் தேவிபட்டினம் உள்ளிட்ட 7க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் உள்ள ஆயிரத்து 300க்கும் மேற்பட்ட நாட்டுப்படகு மீனவர்கள் பயன்பெறுவர். அப்போது அனைத்து மீனவர்களும் தேவிபட்டினம் மீன்பிடி இறங்கு தளத்திற்கு வந்து படகை நிறுத்தி, மீன்களை இறக்கி ஏலம் விடுவர். மேலும் வலைகளை காயவைத்து, பின்னுதல், ஓய்வெடுத்தல் பணிகளில் ஈடுபடுவர். மீனவர்களின் நலனுக்காக

செய்யப்படும் இப்பணிகளை தரமாக செய்ய வேண்டும் என மீனவர்களும், தேவிபட்டினம் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மானாமதுரையில் ரோஜா செடிகள் விற்பனை ஜோர்**

**மானாமதுரை:** மாவட்டத்தில் அக்னி நட்சத்திரத்தில் திடீரென மழை பெய்ய துவங்கியுள்ளதால் ரோஜா செடிகள் விற்பனை அதிகரித்துள்ளது. சிவகங்கை மாவட்டத் தில் கடந்த சில நாட்களுக்கு சுட்டெரிக்கும் அக்னி நட்சத்திரம் ஆரம்பித்த நாளில் இருந்து காற்றமுத்த தாழ்வு நிலை காரணமாக மழை பெய்ய துவங்கியது. இதனால் காற்றில் ஈரப்பதம் அதிகரித்து சீதோஷ்ண நிலை மாறியுள்ளது. வழக்கமாக செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாத இறுதி வரை ஓசூர் மற்றும் பெங்களூர் பகுதியில் இருந்து வரும் ரோஜா செடிகளை வியாபாரிகள் பொதுமக்கள் கூடும் இடங்களில் விற்பனை செய்வர். இம்மாதங்கள் பனியும், மழையும் சேர்ந்த காலமாக இருப்பதால் விற்பனையும் அதிக அளவு நடைபெற்று வருவது வழக்கம். இந்த முறை பருவநிலை மாறியதால் ரோஜா செடிகள் விற்பனையில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் சீசனுக்கு முன்பாக விற்பனைக்காக ரோஜாச்செடிகளை கொண்டு வந்துள்ளனர். மானாமதுரை கீழ்கரையில் உள்ள கோர்ட் முன் உள்ள காலி இடத்தில் செடிகள் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன.

ஓசூரிலிருந்து கொண்டு வரப்பட்ட சாதா ரோஸ், ஊட்டி ரோஸ், பட்டன் ரோஸ் என சிவப்பு, மஞ்சள், வெள்ளை, இளம்சிவப்பு உள்ளிட்ட 15 வண்ணங்களில் ரோஜா செடிகள் விற்பனை செய்யப்படுகின்றன. இதுதவிர மல்லிகை, முல்லை, ஆஸ்லேன், சாமந்தி, அரளி, செம்பருத்தி, ஜாதிமல்லி உள்ளிட்ட உள்ளிட்ட பல்வேறு வகையான பூச்செடிகள் விற்கப்படுகின்றன. தற்போது சித்திரை திருவிழா நடப்பதாலும், கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதாலும் சிறுமிகளும், இளம்பெண்களும் காலையில் இருந்தே கூட் டம் கூட்டமாகாக வந்து வாங்கி செல்கின்றனர். இதுகுறித்து விற்பனையாளர் கோபி கூறுகையில், 'ஓசூர் அருகே மாரண்டஹள்ளியில் இருந்து ரோஜாச்செடிகள், பூச்செடிகள் விற்பனை செய்ய வந்துள்ளோம். ஒரு செடியின் விலை ரூ.25 முதல் ரூ.30 வரையில் விற்பனை செய்கிறோம். மானாமதுரை பகுதியில் அதிக அளவு ரோஜா விற்பனை ஏற்கனவே நடைபெற்றுள்ளது. கடந்த சில நாட்களாக மிதமான வெயில் இருப்பதாலும்,

திருவிழா நேரம் என்பதால் உறவினர்கள், நண்பர்களுக்கு ரோஜா செடிகளை பரிசாக வாங்கி தருவார்கள் என்பதால் இந்த முறை கோடை காலத்தில் ரோஜா விற்பனைக்காக வந்துள்ளோம்' என்றார்.

**பொதுமக்களுக்கு விவசாயிகள் சங்கம் இனிப்பு**

**குலசேகரம்:**

முல்லை பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசு இயற்றிய சட்டம் செல்லாது என அறிவித்து, 142 அடி உயரத்திற்கு அணை நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு உச்சநீதிமன்றம்அளித்த தீர்ப்பை வரவேற்று விவசாயிகள் சங்கம் சார்பில் குலசேகரம் அடுத்துள்ள கொசூர் பகுதியில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு உழவர் மன்ற மாவட்ட செயலாளர் ஹென்றி தலைமை வகித்தார். அயக்கோடு ஊராட்சி தலைவி தங்கரமணி, அன்னை தெரசா அன்னாசிப்பழ உற்பத்தி யாளர் சங்க செயலாளர் லக்கி குளோ ரி, பொருளா ளர் பால் மணி, செயற் குழு உறுப் பினர்கள் லூக் காஸ், பொன் னையன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**காட்டேரிக்குப்பம் பகுதியில் சொட்டுநீர் பாசன முறையில் புடலங்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. சொட்டுநீர் பாசனம் மூலம் புடலங்காய் விளைச்சல் அமோகம்**

**திருக்கனூர்:**

திருக்கனூர் பகுதியில் சொட்டுநீர் பாசன முறையில் விவசாயிகள் காய்கறிகள் பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது புடலங்காய், பீர்கங்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. தண்ணீர் பற்றாக்குறை காரணமாக பாசன தேவையை கருத்தில் கொண்டு சொட்டுநீர் பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டது. மத்திய அரசின் 75 சதவீத மானியத்துடன் கூடிய இத்திட்டம், புதுவையில் தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது.

சொட்டுநீர் பாசனத்தில் சாதாரண விளைச்சலை விட 2 மடங்கு அதிகமாக கிடைப்பதால் இப்பாசனமுறைக்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சொட்டுநீர் பாசனத்தில் தண்ணீர் செல்லும் குழாயிலேயே செடிகளுக்கு

மருந்திடுதல், பூச்சிகொல்லி மருந்துகளும் செலுத்தப்படுகின்றன. இதனால் செலவுகள் குறைவதுடன், உற்பத்தியும் பெருகுகிறது. திருக்கனூர், காட்டேரிக்குப்பம் பகுதியில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் சொட்டுநீர் பாசனத்தில் காய்கறிகள் பயிரிடப்பட்டு உள்ளன. புடலங்காய், பீர்கங்காய் உள்ளிட்ட பயிர்களில் அமோக விளைச்சல் கிடைத்து உள்ளது. பச்சை மிளகாய், கத்திரி, வெண்டை உள்ளிட்ட பல்வேறு தோட்டக்கலை பயிர்களும் பயிரிடப்பட்டு இருக்கின்றன. இதுகுறித்து காட்டேரிகுப்பத்தைச் சேர்ந்த அப்துல்ஹை கூறியதாவது: பல ஆண்டுகளாக சொட்டுநீர் பாசனம் மூலம் சாமந்தி, செண்டு மல்லி, மல்லிகை, ரோஜா, காய்கறி வகைகளில் கத்திரி, வெண்டை, பீர்கை, புடலங்காய் உள்ளிட்டவை பயிர் செய்து வருகிறேன். இதில் செலவு குறைவு. மகசூல் அதிகமாக கிடைக்கிறது, என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**2013–14–ஆம் நிதி ஆண்டில் வெங்காயம் ஏற்றுமதி 25% வளர்ச்சி**



**புதுடெல்லி,**

2013–14–ஆம் நிதி ஆண்டில் வெங்காயம் ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் 25 சதவீதம் அதிகரித்து ரூ.2,877 கோடியாக உயர்ந்துள்ளது. சர்வதேச சந்தையில்

நல்ல விலை கிடைத்ததே இதற்கு காரணமாகும். முந்தைய நிதி ஆண்டில் (2012–13) ரூ.2,294 கோடி அளவிற்கே வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது.

**சர்வதேச சந்தை**

சர்வதேச சந்தையில் 1 டன் வெங்காயத்திற்கு ரூ.21,183 கிடைத்தது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 68 சதவீதம் அதிகமாகும். 2012–13–ஆம் நிதி ஆண்டில் 1 டன் வெங்காயம் ரூ.12,590 என்ற விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது.

வெங்காயம் ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் அதிகரித்துள்ள போதிலும் அளவு அடிப்படையில் குறைந்துள்ளது. சென்ற நிதி ஆண்டில் சில மாதங்கள் வெங்காயம் ஏற்றுமதிக்கு கடுமையான கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்ததே இதன் பின்னணியாக இருந்தது.

வெங்காயம் ஏற்றுமதியை கட்டுப்படுத்தி உள்நாட்டில் சப்ளையை அதிகரிக்கும் நோக்கில் 2013 செப்டம்பர் முதல் பலமுறை குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மத்திய அரசு உயர்த்தியது. இதனால் அளவு அடிப்படையில் வெங்காயம் ஏற்றுமதி குறைந்தது.

பிறகு உள்நாட்டில் வெங்காயம் வரத்து அதிகரித்து விலை குறைந்ததையடுத்து கடந்த டிசம்பர் மாதம் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மத்திய அரசு 350 டாலரிலிருந்து 150 டாலராக (1 டன்) குறைந்தது. வெங்காயம் வரத்து மேலும் சீரானதுடன் விலையும் குறைந்ததையடுத்து குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை ரத்து செய்ததுடன் ஏற்றுமதி கட்டுப்பாடுகளையும் மத்திய அரசு நீக்கியது.

**ஏற்றுமதி**

சென்ற நிதி ஆண்டில் வெங்காயம் ஏற்றுமதி அளவு அடிப்படையில் 25.46 சதவீதம் சரிந்து 18.22 லட்சம் டன்னிலிருந்து 13.58 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. நடப்பு 2013–14 பருவத்தில் (ஜூலை–ஜூன்) வெங்காயம் உற்பத்தி சென்ற ஆண்டைக் காட்டிலும் 13 சதவீதம் அதிகரித்து 1.90 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற பருவத்தில் 1.68 கோடி டன் வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது.

## கூடலூரில் ஒரு பலாப்பழம் ரூ.350 வரை விற்பனை



கூடலூரில் விற்பனைக் காக பலாப்பழங்கள் குவிந்து உள்ளன. ஒரு பலாப்பழம் ரூ.350வரை விற்பனையாகிறது.

### கோடை சீசன் தொடக்கம்

நீலகிரி மாவட்டத்தில் தற் போது கோடை சீசன் களை கட்டி உள்ளது. இதனால் சுற் றுலா பயணிகளின் வரத்துஅதி கரித்து காணப்படுகிறது. மேலும் அண்டை மாநிலங் களில் இருந்து தினமும் நூற் றுக்கணக்கான சுற்றுலா பய ணிகள் கூடலூர் வழியாக ஊட்டிக்கு வந்து செல்கிறார் கள்.

இதை பயன்படுத்தி கூடலூர் பகுதி விவசாயிகள் தங்களது நிலத்தில் விளைந்து உள்ள பலாப்பழங்களை சாலையோ ரம் கொண்டு வந்து குவித்து வைத்து சுற்றுலா பயணிகளி டம் நல்ல விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

### ரூ.150-க்கு விற்பனை

கூடலூர் தொரப்பள்ளி, மாக்கமூலா, மார்த்தோமா நகர், மரப்பாலம் ஆகிய பகுதியில் சாலையோரம் பலாப்பழங் கள் விற்பனையும் களை கட்டி உள்ளது. ஒரு பலாப்பழம் ரூ.150 முதல் ரூ.350 வரை விற்கப்படுகிறது. இதனை சுற்றுலா பயணிகள் மிகுந்த ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

இதனால் தங்களுக்கு உரிய வருமானம் கிடைக்கிறது என விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்து உள்ளனர்.

**<u>தஞ்சையில் இருந்து சேலத்திற்கு 1,300 டன் அரிசி மூட்டைகள் சரக்கு ரெயிலில் அனுப்பப்பட்டன</u>**



**தஞ்சாவூர்,**

தஞ்சையில் இருந்து சேலத்திற்கு 1,300 டன் அரிசி மூட்டைகள் சரக்கு ரெயிலில் அனுப்பப்பட்டன.

<u>நெற்களஞ்சியம்</u>

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். தற்போது சம்பா, தாளடி அறுவடைப்பணிகள் முடிந்து கோடை நெல் சாகுபடி நடைபெற்றுள்ளது.

மேலும் அறுவடை செய்யப்பட்ட நெல் தமிழக அரசின் நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் உள்ள அரிசி ஆலைகளுக்கும், சேமிப்புக்கிடங்கிற்கும் அனுப்பி வைக்கப்படும்.

<u>வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி</u>

சேமிப்புக்கிடங்குகளில் இருந்து பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்கு நெல் மூட்டைகள் சரக்கு ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். இது தவிர தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலைகளுக்கு அனுப்பப்படும் நெல்

மூட்டைகள் அரவை முடிந்து தஞ்சையில் உள்ள பிள்ளையார்பட்டி, நாஞ்சிக்கோட்டை பகுதியில் உள்ள சேமிப்புக்கிடங்கில் கொண்டு வந்து இருப்பு வைக்கப்படும். பின்னர் அங்கிருந்து வெளி மாவட்டங்களுக்கும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு ரேசன்கடைகளுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

1,300 டன் அரிசி மூட்டைகள்

அதன்படி நேற்று தஞ்சையில் உள்ள பல்வேறு சேமிப்புக்கிடங்குகளில் இருந்து அரிசி மூட்டைகள் லாரிகள் மூலம் ஏற்றி வரப்பட்டு சேலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. 1,300 டன் அரிசி மூட்டைகள் லாரிகளில் ஏற்றி வரப்பட்டு 21 ரெயில் வேகன்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

**செஞ்சி பகுதியில் கம்பு விளைச்சல் அமோகம்**



செஞ்சி பகுதியில் கம்பு அமோகமாக விளைந்துள்ளது.

கம்பு விளைச்சல்

செஞ்சி தாலுகா விவசாயத்தை நம்பி வாழும் பகுதியாகும். இங்கு அதிகமாக நெல், கரும்பு, மணிலா ஆகி யவை பயிரிடப்பட்டு வருகிறது. இதற்கு அடுத்த படியாக தண்ணீர் குறைந்த காலங்களில் கேழ்வரகு, கம்பு, எள், துவரை போன்றவை களை பயிர் செய்வார்கள்.

கடந்த 2 ஆண்டு களாக மழை பொய்த்துவிட்ட நிலையில், நிலத்தடி நீரை பயன்படுத்தி விவசாயிகள் கம்பு பயிர் சாகுபடி செய் துள்ளனர். இதற்கு அதிகளவு தண்ணீர் தேவையில்லை என்பதாலும், பராமரிப்பு செலவு குறைவு என்பதாலும் செஞ்சி பகுதிகளில் விவசாயிகள் அதிகளவு சாகுபடி செய்துள்ள கம்பு தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. செஞ்சி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை கம்பு ரூ.1500 முதல் ரூ.1,600 வரை விலைபோகிறது. எதிர்பார்த்த விலைக்கு விற்பனை ஆவதால் கம்பு பயிரிடுவதில் விவ சாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**<u>கால்நடை மருத்துவ படிப்பில் சேர விண்ணப்பம் வினியோகம் விண்ணப்பிக்க ஜூன் 2-ந்தேதி கடைசி நாள்</u>**



**சென்னை,**

கால்நடை மருத்துவப்படிப்பில் சேர விண்ணப்பம் வினியோகம் நேற்று தொடங்கியது. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் அனுப்ப ஜூன் 2-ந்தேதி கடைசி நாள்.

<u>கால்நடை மருத்துவப்படிப்பு</u>

தமிழ்நாட்டில் சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரியில் கால்நடை (பி.வி.எஸ்.சி.) மருத்துவ படிப்புக்கு 120 இடங்களும், நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக்கல்லூரியில் 80 இடங்களும், நெல்லை, தஞ்சை மாவட்டம்

ஒரத்தநாடு ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மருத்துவக்கல்லூரியில் தலா 40 இடங்களும் உள்ளன.

மேலும் சென்னை செங்குன்றம் அருகே உள்ள கொடுவல்லியில் உணவு மற்றும் பால் தொழில்நுட்பம் கல்லூரியில் பி.டெக் (உணவு தொழில்நுட்பம்) படிப்பில் சேர 20 இடங்களும், ஓசூரில் உள்ள கோழிஉற்பத்தி மற்றும் மேலாண்மை கல்லூரியில் பி.டெக். கோழியினஉற்பத்தி தொழில் நுட்ப படிப்புக்கு 20 இடங்களும் உள்ளன.

<u>விண்ணப்பம் வினியோகம் தொடக்கம்</u>

இந்த இடங்களில் சேர்வதற்கான விண்ணப்பம் வழங்கும் பணி நேற்று தொடங்கியது. இந்த விண்ணப்பம் விற்பனையை தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) டாக்டர் அரிகிருஷ்ணன் வேப்பேரியில் உள்ள அரசு கால்நடை மருத்துவக்கல்லூரியில் தொடங்கி வைத்தார்.

முதல் நாள் என்பதால் ஏராளமான மாணவ-மாணவிகள் பெற்றோர்களுடன் வந்து விண்ணப்ப படிவங்களை பெற்றுச்சென்றனர். இதுபோல தமிழ்நாடு முழுவதும் திருச்சி, மதுரை, நெல்லை, கோவை உள்பட 14 நகரங்களில் உள்ள கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களில் விண்ணப்பம் கொடுக்கப்படுகிறது. விண்ணப்பங்கள் இந்த மாதம் 31-ந்தேதி வரை வழங்கப்படும்.

<u>ஜூன் 2-ந்தேதி கடைசி நாள்</u>

பூர்த்தி செய்த விண்ணப்ப படிவங்கள் தலைவர், மாணவர் சேர்க்கை குழு, (இளநிலை) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், மாதவரம் பால் காலனி, சென்னை-600051 என்ற முகவரிக்கு ஜூன் மாதம் 2-ந்தேதி மாலை 5.45-மணிக்கு முன்னதாக சென்றடைய வேண்டும்.

கால்நடை மருத்துவப்படிபில் சேரவும் கடந்த வருடத்தை விட இந்த வருடம் கட் ஆப் மார்க் 0.5 முதல் 1 வரை கூட வாய்ப்பு இருப்பதாக கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**மீன்பிடி தடைகாலம் எதிரொலி: படகுகளின் பழுது நீக்கும் பணியில் மீனவர்கள் தீவிரம்**




**கோட்டைப்பட்டினம்,**

மீன்பிடி தடைகாலத்தை யொட்டி விசைப்படகு களில் ஏற்பட்ட பழுது களை நீக்கும் பணியில் மீனவர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

படகுகளுக்கு வர்ணம் தீட்டினர்

புதுக்கோட்டை மாவட் டத்தில் கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாபட்டினத்தில் இருந்து விசைப்படகுகளில் கடலுக்கு சென்று மீனவர்கள் மீன்பிடித்து வந்தனர். இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் 15–ந் தேதி முதல் வருகிற 29–ந் தேதி வரை 45 நாட் களுக்கு விசைப்படகு மீனவர் களுக்கான மீன்பிடி தடை காலம் அமலில் உள் ளது. இதனால் மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்கு செல்ல வில்லை.

தடைகாலம் முடிய இன்னும் 17 நாட்களே உள்ளநிலையில், விசைப்படகு மீனவர்கள் மீண்டும் கடலுக்கு சென்று மீன்பிடிப்பதற்கான ஏற்பாடு களை செய்து வரு கின்றனர்.

அவர்கள் தங்களது படகுகளை கரையில் ஏற்றி, அவற்றில் ஏற் பட்ட பழுதுகளை சரிசெய்யும் பணியிலும், வலைகளை சரி செய்யும் பணியிலும் ஈடுபட் டனர். பின்னர் பழுது நீக்கப் பட்ட விசைப்படகுகளுக்கு வர்ணம் தீட்டி, புதுப்பொழிவு பெற செய்துள்ளனர்.

தொழில்கள் பாதிப்பு

இதையடுத்து மீண்டும் கடலுக்கு சென்று மீன் பிடிப் பதற்கான நாளை எதிர்நோக்கி மீனவர்கள் காத்திருக்கின் றனர். இந்த தடைகாலத்தை யொட்டி மீன்பிடி சார்ந்த தொழில் களான ஐஸ் பேக்டரி, தனியார் டீசல் பங்க் மற்றும் சில தொழில்களின் வியா பாரம் முற்றிலுமாக பாதிக்கப்பட் டது. இதனால் கடற்கரை பகுதிகள் வெறிச்சோடி கிடந்தன.

## உளுந்து பயிரில் கூடுதல் மகசூல் பெற இலைவழி ஊட்டச்சத்து தெளிக்க வேண்டும்



**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள உளுந்து பயிரில் கூடுதல் மகசூல் பெற இலைவழி ஊட்டச்சத்து தெளிப்பது அவசியம் என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் கே.எம்.ஷாஜஹான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஒரு செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:–

இலைவழி ஊட்டச்சத்து

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது கோடையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள உளுந்து பயிர் பூக்கும் பருவத்தில் உள்ளது. உளுந்து பயிரில் கூடுதல் மகசூல் பெற பூக்கள் உதிர்வதைத் தடுப்பது அவசியமாகும். மேலும் அதிக பூக்கள் பூக்கவும், அதன் மூலம் திரட்சியான அதிக காய்கள் கிடைக்கவும் உளுந்து பயிருக்கு

இலைவழி மூலம் ஊட்டச் சத்து வழங்குவது மிகவும் அவசியமாகும். இலைவழி மூலம் ஊட்டச்சத்து வழங்குவதால் பயிருக்கு ஊட்டச்சத்து உடனடியாகக் கிடைக்கப்பெற்று நல்ல பலனைத் தரும்.

ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரத்தை 10 லிட்டர் தண்ணீரில் தெளிப்பதற்கு முதல் நாள் இரவே ஊறவைத்து மறுநாள் கரைசலை வடிகட்டி தெளிந்த கரைசலுடன் தேவையான அளவு தண்ணீர் கலந்து 200 லிட்டர் கரைசலாக்கி கைத்தெளிப்பான் மூலம் மாலை வேளையில் பூக்கும் தருணம் ஒரு முறையும் பின்பு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் என இரண்டு முறை தெளிக்க வேண்டும். அல்லது ஒரு லிட்டர் தண்ணீருக்கு யூரியா 20 கிராம் கலந்து பூக்கும் தருணத்தில் மற்றும் 15 நாட்கள் கழித்து என இரண்டு முறை தெளிக்க வேண்டும்.

<u>பூ உதிர்வதை தடுக்க...</u>

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் ‘பயறு அதிசயம்‘ என்ற பயிர் வளர்ச்சி ஊக்கியை ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் பூக்கும் சமயம் மற்றும் 15 கழித்து என இரண்டு முறை தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்த்து தெளிக்க வேண்டும்.

பூ உதிர்வதைத் தடுக்க 4 லிட்டர் தண்ணீருக்கு 4 மி.லி.பிளேனோபிக்ஸ்(என்.ஏ.ஏ.) வளர்ச்சி ஊக்கியினை(40 பி.பி.எம்.) பூப்பூக்கும் முன்பு ஒருமுறையும் மற்றும் 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் ஆக இரண்டு முறை தெளிக்கவும். இதனுடன் லிட்டருக்கு 100 மி.லி. கிராம் சாலிசிலிக் அமிலம் கலந்து தெளிக்கலாம். இதனால் பூக்கள் உதிர்வது தடுக்கப்படுகிறது. திரட்சியான அதிக காய்கள் கிடைக்கின்றன.

உளுந்துப் பயிருக்கு இவ்வாறு இலைவழி ஊட்டச்சத்து தெளிக்கும்போது பரிந்துரைக்கப்பட்ட அளவிற்கு மேல் உரத்தைப் பயன்படுத்தினால் பயிர் கருகிவிட வாய்ப்புள்ளது. மேலும் சூரிய வெளிச்சம் அதிகமாக உள்ள மதிய வேளையிலும் ஊட்டச்சத்து தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும். எனவே பூக்கும் தருணத்திலுள்ள உளுந்து பயிருக்கு இவ்வாறு கவனமாக இலைவழி மூலம் ஊட்டச்சத்து வழங்கி கூடுதல் மகசூல் பெற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**வரத்து அதிகரிப்பால் மக்காச் சோளம் விலை குறைந்தது**



**நொய்யல்,**

வரத்து அதிகரிப்பினால் மக்காச் சோளம் விலை குறைந்து உள்ளது.

மக்காச் சோளம்

கரூர் மாவட்டம் நொய்யல் வேட்டமங்கலம், குந்தானி பாளையம், மரவாபாளையம், கவுண்டன்புதூர், ஓலப் பாளையம், திடுக்காடுதுறை, ஓரம்புப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மக்காச் சோளத்தை தனியாகவும், மஞ்சள், கரும்பு போன்ற பயிர்களில் ஊடு பயிராகவும், விவசாயிகள் பயிரிட்டுள் ளனர்.

விளைந்த மக்காச் சோளக் கதிர்களை பறித்து எந்திரம் மூலம் மக்காச் சோளத்தை பிரித்து எடுக்கின்றனர்.பின்னர் அவற்றை சாக்குகளில் போட்டு கட்டி வைக்கின்றனர். இதையடுத்து விவசாயிகள் மக்காச் சோளத்தை உள்ளூர் பகுதிகளுக்கு வரும் வியா பாரிகளிடமும், அருகில் உள்ள சாலைப்புதூரில் வாரத்தில் திங்கள் கிழமை செயல்பட்டு வரும் ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கும் கொண்டு சென்று ஏலத்தின் மூலம் விற்பனை செய்கின்றனர்.

பல்வேறு மாநிலங்களுக்கு...

மேலும் கோழித் தீவனம், மாட்டுத் தீவனம் தயாரிப்பாளர்கள் மக்கா சோளத்தை புரோக்கர்கள் மூலம் வாங்கி செல்கின்றனர். மக்காச் சோளத்தை வாங்கும்

புரோக்கர்கள் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். மாவு தயார் செய்யும் மில் நிர்வாகத் தினர் மக்கா சோளத்தை வாங்கி மாவு தயார் செய்து விற்பனை செய்து வருகிறார்கள். மேலும் பாப்கார்ன் தயாரிப் பாளர்கள் மக்கா சோளத்தை அதிகம் வாங்கி செல் கின்றனர்.

<u>விலை குறைந்தது</u>

இந்தநிலையில் கடந்த வாரம் மக்கா சோளம் 100 கிலோ கொண்ட மூட்டை ரூ. 1,450–க்கு விற்பனை ஆனது. இந்த வாரம் 100 கிலோ கொண்டு மூட்டை ரூ.1,350– க்கு விற்பனையானது. வரத்து அதிகரிப்பினால் மக்கா சோளம் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. இதனால் மக்கா சோளம் பயிரிட்டுள்ள விவசாயிகள் பெரும் கவலை அடைந்து உள்ளனர்.

## <u>9 நாட்களில் 112 மில்லி மீட்டர் மழைப்பதிவு</u>

**மதுரை,**

மதுரை மாவட்டத்தில் 9 நாட்களில் 112 மில்லி மீட்டர் மழைப்பதிவாகி உள்ளது.

<u>ஆழ்துளை கிணறுகள்</u>

தமிழகத்தில் கடந்த ஆண்டு (2013) பருவ மழை பொய்த்து போனது. எனவே இந்த ஆண்டு மாநிலம் முழுவதும் குடிநீர் பஞ்ச அபாயம் இருந்து வந்தது. வைகை அணையில் இருந்து தண்ணீர் எடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால், மக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்ய மாநகராட்சி சார்பில் ரூ. பல கோடி செலவில் 420 இடங்களில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டன. கடந்த 3-ந்தேதி வைகை அணையின் நீர்மட்டம் 21 அடி ஆனது. இனி அணையில் இருந்து தண்ணீர் எடுக்க முடியாத சூழ்நிலை உருவானது. அந்த சமயத்தில் திடீரென்று மழை பெய்யத் தொடங்கியது. கோடையின் கொடுமையான அக்னி நட்சத்திரம் 4-ந் தேதி தொடங்கிய அன்றே அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

நீர்மட்டம் உயர்ந்தது

தொடர்ச்சியாக மழை பெய்ததன் காரணமாக அணைக்கு வரும் நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்தது. நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 28.58 அடியாக இருந்தது. பெரியாறு அணையின் நீர்மட்டம் கடந்த 1-ந் தேதி 109.60 அடியாக இருந்தது. ஆனால் நேற்று 114.80 அடியாக உயர்ந்தது. இந்த திடீர் மழையால், மதுரை மாநகர மக்களுக்கு தற்காலிகமாக குடிநீர் பிரச்சினை நீங்கியது. அணையில் தற்போது உள்ள நீரை அடுத்த மாதம் (ஜூன்) 5-ந் தேதி வரை வினியோகம் செய்து விடலாம் என மாநகராட்சி நம்பி உள்ளது. ஒருவேளை தட்டுப்பாடு ஏற்பட்டால், பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் பெறலாம் என திட்டமிட்டு உள்ளது. கேரளாவில் ஜூன் மாதம் 1-ந்தேதி தென்மேற்கு பருவ மழை தொடங்கி விடும் என்பதால், மதுரை மாநகர மக்களுக்கு இந்த இனி தண்ணீர் பிரச்சினை இருக்காது என்று மாநகராட்சி நம்புகிறது.

மழை அளவு

கடந்த 4-ந் தேதி முதல் நேற்று வரை மொத்தமுள்ள 9 நாட்களில் அதிகபட்சமாக தமிழகத்தில் கன்னியாகுமரியில் 308 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. மற்ற மாவட்டங்களில் பதிவான மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு:-

நெல்லை- 203, நீலகிரி-170, ராமநாதபுரம்-164, திருவாரூர்-155, சிவகங்கை-147, தேனி-146, நாகப்பட்டினம்-138, கடலூர்-131, தூத்துக்குடி-126, விருதுநகர்-113, மதுரை-112, திண்டுக்கல்-107, பெரம்பலூர்-101, தஞ்சாவூர்-100, அரியலூர்-98, புதுக்கோட்டை-97, திருச்சி-81, கோவை-75, விழுப்புரம்-69, சேலம்-68, கரூர்-68, திருப்பூர்-66, நாமக்கல்-62, கிருஷ்ணகிரி-39, ஈரோடு-36, திருவண்ணாமலை-34, காஞ்சிபுரம்-32, வேலூர்-32, தர்மபுரி-31 ஆகும்.

மதுரை

மதுரை மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த 10 ஆண்டுகளில் மே மாதத்தில் 9 நாட்களில் சராசரியாக 112 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருப்பது இதுவே அதிகபட்சமாகும். மதுரையை பொறுத்தவரை அதிகபட்சமாக மேட்டுப்பட்டியில்

181 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. மற்ற பகுதிகளில் பதிவான மழையளவு விவரம் வருமாறு:-

மேலூர்-174, தல்லாகுளம்-148, பேரையூர்-147, சோழவந்தான்-137, சாத்தையாறு-131, ஆண்டிப்பட்டி-121, வாடிப்பட்டி-116, விமான நிலையம்-113, விரகனூர்-113, தனியாமங்கலம்-110, கள்ளந்திரி-109, மதுரை தெற்கு-105, திருமங்கலம்-91, உசிலம்பட்டி-80, சிட்டம்பட்டி-79, புலிப்பட்டி-78, கள்ளிக்குடி-77, இடையபட்டி-71, குப்பணம்பட்டி-56 ஆகும்.